★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 23 முஹற 22 இதழ் 269

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9—11—82

## கைகலப்பில் முடிவடைந்த உதைபந்தாட்டப் போட்டி!

### பொலிஸார் தடியடிப்பிரயோகம், சிலர்காயம், ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இருகல்லூரிகளுக்கிடையில் நடைபெற்றஉதைபந்தாட்டப் போட்டி கைகலப்பில் முடிந்தது! இக்கைகலப்பின்போது சிலர்காயமடைந்துள்ளனராம்.

கைகலப்பு ஆரம்பமான 10 நிமிடத்துக்குப் பின்னர்பொலிசார் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்துதடியடிப் பிரயோகம் செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதுசம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுவிசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ். மாநகரவிளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியின்போதே இக்குழப்பநிலை ஏற்பட்டது

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், உரும்பராய் இந்துக்கல்லூரிக்குமிடையே உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றது. போட்டி முடிவடைவதற்கு சுமார் எட்டு நிமிடமிருக்கையில் ஆதரவாளர் ஒருவர், மத்தியஸ்தர் மீது திடீரெனப்பாய்ந்துதாக்கியதாகவும், இதனைத்தொடர்ந்து கைகலப்பு ஏற்பட்டதாக

[8ம் பக்கம் பார்க்க]

# ‘பாராளுமன்றத்தில் குட்டிமணி அங்கத்துவம் பெறமுடியாது!”

## பத்திரிகை மாநாட்டில் லலித்

### ‘யாழ். ஏற்றுமதிக் கிராமங்கள்’ திட்டம் பற்றியும் பிரஸ்தாபம்!

(கொழும்பு)

“‘குட்டிமணி எனப்படும் யோகச்சந்திரன் செல்வராசா பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது. என்ன காரணமிருந்தாலும் அவர் பாராளுமன்றத்தில் அமர முடியாது. அதே நேரத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எவருக்கும் நாம் மரணதண்டனையும் விதிக்கமாட்டோம். ‘குட்டிமணி’க்குக் கூட இன்னும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.’

இவ்வாறு வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் இரு லலித் அத்துலத் முதலி நேற்றுத் தமது அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். இம்மகாநாட்டில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

### தேசிய அரசாங்கம்

“தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு அரசாங்கத்தரப்பினரை விட எதிர்க்கட்சியினரே பெரும் ஆவல் கொண்டுள்ளனர். இது தொடர்பாக பல எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் அரசாங்கத்தையும் வற்புறுத்தியுள்ளனர்.

“முக்கியமாகத் தமிழ் மக்களும் தேசிய அரசாங்கத்தை விரும்புவார்கள் என்று நம்புகிறோம். சர்வஜன வாக்கெடுப்பின் பின்னரே தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அரசாங்க எம் பி.க்களின் ராஜினுமா பற்றி சர்வஜன வாக்கெடுப்பின் பின்னரே தீர்மானிக்கப்படும்.

### ஏற்றுமதிக் கிராமங்கள்

“யாழ்ப்பாணத்தில் ஏற்றுமதிக் கிராமங்கள் அமைப்பதற்கான திட்டமொன்றை தயாரித்து வைத்துள்ளேன். மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இதனை நான் செய்யவில்லை. நிச்சயம் இதை விரைவில் நடைமுறைப்படுத்துவேன். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இதற்கு ஆதரவு தந்தால், அமுலாக்குவது இலகுவாகவிருக்கும். அவர்களின ஆதரவு கிடைக்கும் எனறு நமபுகிறேன்.

“யாழ்ப்பாணத்து வெங்காயம், மிளகாய், முந்திரிகையை மட்டுமன்றி மற்றும் பல பொருட்களையும் உற்பத்தி செய்து, அவற்றை ஏற்றுமதி செய்யும் பாரிய திட்டமொன்றும் என்னிடமுள்ளது.” என்றார்.

(இ-வெ)

★ காலி வன்செயல்கள்:

## “சம்பவம் நடைபெற்றபோது பொலிஸ் அதிபர் பதவியில் இல்லை”

(கொழும்பு)

காலிவன்செயல்கள் தொடர்பான விசாரணை, காலி குடும்ப நீதிமன்றத்தில் முன்னாள் நீதியரசர் திரு. அலெஸ் தலைமையிலானவிசாரணைக்குழுமுன்னிலையில் நேற்று நடைபெற்றது.

காலி அரசாங்க அதிபர் திரு. போர்ட்டி அமரசிங்கா இவ்விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

“காலியில் வன்செயல்கள்

[8-ம் பக்கம் பார்க்க]

## மோட்டார் சைக்கிள் விபத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் விபத்துக்குள்ளானதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார் மற்றவர் படுகாயங்களுக்குள்ளானார்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த க. சண்முகலிங்கம் [35-வயது] என்பவரே பலியானவராவார். இளம் குடும்பஸ்தரான இவர் பூநகரியிலுள்ள சமநல சேவை அலுவலகத்தில் கடமையாற்றுபவர் என்றும் ஒரு குழந்தைக்கு தந்தையென்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் நேற்று முன்தினமிரவு

[8-ம் பக்கம் பார்க்க]

★ சாவகச்சேரி பொலிஸ்நிலைய தாக்குதல் சம்பவம்:

## “வெடிச்சத்தம் நின்றதும் வீதியை எட்டிப்பார்த்தேன்!”

### நால்வர் மரணவிசாரணையில் கான்ஸ்டபிள் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

நான்கு ஐந்து நிமிடங்கள் வெடிச்சத்தம் தொடர்ச்சியாக கேட்டது. வெடிச்சத்தம் நின்றது பிரதான வீதியை எட்டிப்பார்த்தேன் ஒரு மினி பஸ் நிறுத்தப்பட்டிருந்தது அதுசென்ற பின் அறையிலிருந்து பொலிஸ் நிலையம் சென்றேன்.

இவ்வாறு சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதல் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதல் சம்பவம் தொடர் நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எச், காரியப்பர் முன் ஆரம்பமான மரண விசாரணையில் சாட்சியமளித்த கான்ஸ்டபிள் பாலசிங்கம் கிருஷ்ணபிள்ளை கூறினார்.

சாவகச்சேரி பொலிஸ்நிலைய தாக்குதலின் போது கொலை செய்யப்பட்ட மூன்று பொலிசாரினதும் ஒரு கொலை சந்தேக நபரினதும் மரணவிசாரணை நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம் எச் காரியப்பர் முன்னிலையில் ஆரம்பமானது சம்பவ தினமிரவு பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்ற நியமிக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பாலசிங்கம் கிருஷ்ணபிள்ளை (45-வயது) சாட்சியமளித்தார்

அவர் கூறியதாவது: நான் கடந்த மாதம் 26ம் திகதி இரவு 10-30லிருந்து 27ம் திகதி காலை 4 மணிவரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்ற நியமிக்கப்பட்டேன். 26ம் திகதி இரவு 10-0லிருந்து கடமையாற்றினேன். அப்பொழுது பொலிஸ் கான்ஸ்டபிள் கருணநந்தன் பொலிஸ் நிலைய கடமையிலீடுபட்டிருந்தார். அப்பொழுதுபொலிஸ்நிலையத்தில் வேறு பொலிசாரால்

[8-ம் பக்கம் பார்க்க]

### பஸ்-மினிபஸ் விபத்து

## 12 பேர் பலி!

(காலி)

காலிக்கு அருகாமையில் தொடந்துவ எனுமிடத்தில் நிகழ்ந்த பஸ் - மினிபஸ்விபத்தில், இறந்தவர் தொகை பன்னிரண்டாக அதிகரித்துள்ளது

இவ்விபத்தில் ஒருகுடும்பத்தைச் சேர்ந்தகணவன், மனைவி மூன்று குழந்தைகள் உள்ளிட்டு 12 பேர் பலியானார்கள். பதினெட்டுப்பேர் கடுமையான காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

நாளை மகத்தான

திறப்பு விழா

யாழ். நகரில்

டில்கா கிறீம்ஹவுஸ்

404, ஆஸ்பத்திரி வீதி

யாழ். பஸ் ஸ்ராண்ட் முன்பாக

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் மற்றும் கேக், றோல்ஸ், அறுசுவை சிற்றுண்டி யாவிற்கும் எம்மையே நாடுங்கள்.

நன்றி!

உரிமையாளர்

5093

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கடை நிலையும் கதவும் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ள வும் 671, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்தி யாழ்ப்பாணம். 5073

பரந்தன் 5-ம் வாய்க்காலில் 6½ ஏக்கர் நெற்காணி விற் பனைக்குண்டு விலை ஏக்கர் 50,000/- K. B. சுந்தரம் 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணம். 5085

தமிழ், ஆங்கில தட்டச்சு, றேனியோ மெசின்கள் விற் பனைக்குண்டு. தொடர்பு: நிர் வாகி, சங்கர் ஹாட்லி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 4864

யாழ். மாநகரசபை எல்லைக் குள் புதிய சோனக தெருவில் 35பரப்புகாணி முழுதாகவோ, துண்டுகளாகவோ விற்கப் படும். கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பரஇல: 5077, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப் பாணம். 5077

திருநெல்வேலிச் சந்தை, சந்தி. அரசாங்கக் கந்தோர் மத்தியில் பலாலி ரோட், இரு அறைகள் கட்டக்கூடிய நிலம் தங்கள் செலவில் கட்டக் கூடி யவர் தொடர்பு கொள்ளவும். கி. சுப்பிரமணியம். 5090


# "தாராள பொருளாதார கொள்கையை மக்கள் ஏற்றுள்ளனர்"

## - அமைச்சர் லலித்

(கொழும்பு)

"ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை ஜனாதிபதி யாக மக்கள் மீண்டும் தெரிவு செய்ததன் மூலம் அரசின் தாராள பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்தும் அமுல் செய்ய ஆதரவளித்துள் ளனர்".

இவ்வாறு வர்த்தக, கப்பற் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வெலிகமவில் நடைபெற்ற மகாபொல சந்தை வைபவத்தில் உரை யாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

மக்களுக்கும், நாட்டுக்கும் அரசின் தாராள பொருளா தாரத் திட்டம் நன்மைதரும். இக்கொள்கையை விரும்பாத வர்களும் அதன் நன்மையை அடுத்துவரும் ஆண்டுகளில் அநுபவிப்பார்கள்.

சகல மக்களும் தேசிய அபி விருத்தியின் பொருட்டு ஐக்கி யப்படவேண்டும். எதிர்கால சந்ததியினரின்மேம்பாட்டிற்கு மகாபொலத் திட்டம் உதவி வருகிறது" என்றார். (வெ)

# சோதிட வித்தகருக்கும் புலவர் மணிக்கும் சண்டிலிப்பாயில் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

பிரபல சோதிட வித்தகர் வே. சுவாமிநாதன் 'சாவித் திரி சரிதம்' நூலாசிரியர் புல வர்மணி வே. கனகசபாபதி ஆகியோரை சண்டிலிப்பாய் மக்கள் பூரண கும்பம் வைத்து மகரதோரணங்கட்டி சண்டி லிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க ஆதரவில் பாராட்டு விழா எடுத்துக் கௌரவித் தனர்.

சோதிடருக்கு சிவதர்மவள் ளல் க. கனகராசா ஜே. பி. பொன்னாடை போர்த்து மலர் மாலை அணிவித்துக்கௌர விக்க முதலியார் வை. மகே சன் புலவர் மணிக்குப் பொன் னாடை போர்த்தி மலர்மாலை சூட்டிக் கௌரவித்தார்.

இவ்வைபவம் சண்டிலிப் பாய் பத்திரகாளி அம்மன் தேவஸ்தான முன்றலில் சங் கத்தலைவர் திரு. ம. பொ. செல்வரத்தினத்தின் தலைமை யில் நடைபெற்றது.

முதலியார் வை. மகேசன் தமது ஆசியுரையில் கூறியதா வது:

"எமது வாழ்வில் ஏற்படும் மேடு பள்ளங்களை முன்கூட் டியே அறிவிக்க வல்லது சோதி டக்கலை. சைவமக்களாகிய நாங்கள் முற்பிறப்பு மறு பிறப்பு என்பவற்றில் நம்பிக் கையுடையவர்கள். ஆகவே சோதிட வித்தகர் வே. சுவாமி நாதனைப் பாராட்டுகிறோம்.

'சாவித்திரி சரிதம்' என் னும் காவியத்தில் ஆழ்ந்த செம்பொருளையும் சமய உண் மைகளையும் எடுத்தோதும் புல வர் மணி வே. கனகசபாபதி யையும் பாராட்டுகிறோம். இத் தகைய நல்லுபதேசங்களைக் கொண்ட நூல்களினால் எமது கிராமத்திற்கே பெரும் மதிப்பு ஏற்பட்டுள்ளது. எமது தவப் பயன் இப்படியான நல்ல நூல் களை மேலும் எழுதி உதவ உற் சாகப்படுத்துவது எங்கள் கடமை.

"சாவித்திரி சரிதம்" நூலைப்பற்றி ஆய்வுரை நிகழ் திய பண்டிதர் சி. வேலுப் பிள்ளை கூறியதாவது:

"சாவித்திரி சரிதம் ஒரு காவியத்துக்குரிய அம்சங்கள் எல்லாம் அமைந்ததாக இருக் கின்றது. ஆற்றுவளம், நாட்டு வளம், நகரவளம், கடல், மலை சூரியோதயம், சந்திரோதயம், வர்ணனைகள், திருமணம், முடி சூட்டல், அரசியல், காதல், உலா களியாட்டு முதலியவற் றைப்பற்றி எல்லாம் கூறுகி றது. இந்நூல் வெளிவந்தது யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல் லாதுதமிழ்கூறும் நல்லுலகத்தி ற்கும்பெருமையைத்தருகிறது. சொற்சுவை, பொருட்சுவை, சந்த அமைவு பொருளாழம் எல்லாம் பொருந்தியது 20ம் நூற்றாண்டின் பெருங்காப்பிய மாகத் திகழ்கிறது.

அரசகேசரி, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், முத் துக்குமார கவிராயர், சின்னத் தம்பிப் புலவர் ஆகியோரின் வரிசையில் இப்புலவரும் வைத்து எண்ணத்தகுந்தவர் என நான் சந்தேகமில்லாமல் கூறுவேன். புகழ்ச்சி யல்ல.

சைவப்புலவர் தா. கண பதிப்பிள்ளையும் ஆய்வுரை நிகழ்த்தினார்.

சங்கச் செயலாளர் ஆசிரி யர் வ. நடராசா நன்றியுரை நவிலும்பொழுது கூறியதா வது:

சாவித்திரி சரிதம் கற்றோ ரும் மற்றோரும் படித்து இன் புறக்கூடியது இல்லறத்தாருக் கும் மாணவருக்கும் அருமை யான பண்புகளை விளக்கு கிறது. இந்நூல் அறிவு, சம யம், அரசியல் கற்பு, வாழ்க் கைப் பண்பாடு ஆகிய பல அம்சங்களும் நிறைந்த காவி யம். இது பாடசாலைகளில் பாடப்புத்தகமாகவும் உபயோ கிக்கக்கூடியதாக அமைந்தி ருக்கிறது.

# இளம்பெண்ணின் சோகமுடிவு

[பூநகரி]

திருமணமான அண்ணனுக் குக் கூடுதலாகத் தாய் பணம் கொடுத்து விட்டதாகத் தாயு டன் வாக்குவாதப்பட்டுக் கொண்ட இளம்பெண் மன முடைந்து தனவாழ்வைமுடித் கொண்டார். இச் சம்பவம் பூநகரியில் தம்பிராய் என்ற இடத்தில் நடந்தது.

திடீர் மரணவிசாரணை அதி காரி திரு. அ. த. இராசேந்தி ரம் ஜே. பி. மரணவிசாரணை நடாத்தினார்.

மரணவிசாரணையின்போது, இறந்தவரின் தாயார் செ. பத்மாவதி சாட்சியமளிக்கை யில் கூறியதாவது:-

"கூலிப்பணத்தைவிட நான் எனது மகனுக்கு 50ரூபாகூடக் கொடுத்தேன். எனது நான் காவது மகள் இராசேஸ்வரிக்கு இது பிடிக்கவில்லை. இதனால் வாக்குவாதப்பட்டார்"

கிளிநொச்சி பொலிஸ் பகு தியைச் சேர்ந்த திரு. ஆர். டி. பரீத் சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டார்.

கிளிநொச்சி வைத்திய அதி காரி திரு. பொன்னம்பலம் நவ ரத்தினராசா பிரேத பரிசோ தனை நடாத்தினார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக் கப்பட்டது.

# மாவட்டப் போட்டியில் இவர்கள் முதலிடம்

(அரியாலை)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே கல் வித்திணைக்களத்தால் நடாத் தப்பட்ட சங்கீத, நடன, நாட கம் போட்டிகளில் யாழ். பரி யோவான் கல்லூரி மாணவர்க ளான செல்வன் யோ. யாத வன் ஆரம்ப பிரிவு கர்நாடக இசைப்போட்டியில் 1ம் இடத் தையும், மத்திய பிரிவுக்கான புல்லாங்குழல் வாத்திய இசைப் போட்டியில் செல்வன் ம. தயா பரன் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர். இவர்கள் அகில இலங்கை ரீதியில் நடை பெறவிருக்கும் போட்டியில் கலந்து கொள்ள விருக்கின்ற னர். (அ)


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

மீட்கப்படாத அடைவுப் பொருட்களின்

## ஏல விற்பனை

மக்கள் வங்கி, நல்லூர்க் கிளையில் (தற்பொழுது மூடப்பட்டுள்ளது) அடைவு வைக்கப்பட்டு 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் திகதிவரை மீட் கப்படாத நகைகள் யாவும்

1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் திகதி காலை 10-00 மணியளவில்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, மக்கள் வங் கிக் கிளைக் கட்டிடத்தில் வைத்துப்

**பகிரங்க ஏலத்தில் விற்பனை**

செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
05-11-1982 5066


# மாதாபுரம் ச. ச. நிலையம்

[கிளிநொச்சி]

உருத்திரபுரம் மாதாபுரம் சனசமூக நிலைய அங்குரார்ப்ப ணக்கூட்டம் 8ம் வாய்க்கால் கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. ஆ. செல்லத் துரை தலைமையில் நடைபெற் றபோது பின்வருவோர் நிர்வா கிகளாக தெரிவானார்கள்.

தலைவர்:- மா. கணபதிப் பிள்ளை, உபதலைவர்; ஆ. செல் லத்துரை, செயலாளர்; அ. எமி லியானுஸ் உபசெயலாளர்:- வே. சிவலிங்கம், பொருளா ளர்;- செ. பாலசுப்பிரமணி யம். உறுப்பினர்கள் 11 பேர் (அ)

# மன்னாரில் காசநோயாளர் அனுபவிக்கும் துன்பம்

[மன்னார்]

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த 6 மாதங்களாக காசநோய் வைத்திய நிபுணரின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மன்னார் அரசினர்ஆதாரவைத் தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் காசநோயாளர்களின் வைத்திய அறிக்கையும் மன் னார் கச்சேரிக்கு அனுப்பிவைக் கப்படுவதில்லை.

இதனால் காசநோயாளர் களுக்கு அரசினால் வழங்கப் படும் உதவிப்பணமும் வழங் கப்படுவதில்லையென மன்னார் அரசினர் ஆதாரவைத்திய சாலையில்சிகிச்சைபெற்றுவரும் காசநோயாளர்கள் தெரிவித் தனர்

ஆரம்பத்தில் யாழ் பண்ணை வைத்தியசாலையிலிருந்து வருகைதரும் வைத்திய அதி காரி ஒருவர் காசநோயாளர் களை வைத்தியபரிசோதனைக் குட்படுத்திவந்தார்.

இவரது சேவை நிறுத்தப் பட்டபின் கடந்த ஆறு மாத காலமாக மன்னார் அரசினர் ஆதாரவைத்தியசாலையில் காசநோயாளர்களுக்கான வைத்தியபரிசோதனை நடை பெறவில்லை என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

# சம்பத்திரிசியார் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் சம்பத்திரிசியார் கல் லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான உதைபந்தாட்டப்போட்டியில் சம்பத்திரிசியார் கல்லூரி 2ம் 3ம் பிரிவுகளில் முறையே 2-0 3-0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

# சாம்பியன்களாக தெரிவு

(அரியாலை)

யாழ். உதைபந்தாட்ட லீகின் ஆதரவில் நடை பெற்ற 7 பேரைக்கொண்ட உதைபந்தாட்டப்போட்டியில் 'ஏ' பிரிவில் பாஷையூர் சென்ற் அந்தனிஸ் விளையாட்டுக்கழக மும் 'பி' பிரிவில் அரியாலை விளையாட்டுக்கழகமும் சாம் பியன்களாகின,

அரியாலை சனசமூகநிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான போட்டியின் அரையிறுதிப் போட்டியில் யாழ் முஸ்லிம் லீக் விளையாட்டுக்கழகத்திற் கும், பாஷையூர் சென்ற் அந்த னிஸ் விளையாட்டுக்கழகத் திற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென்ற் அந்த னிஸ் கோஷ்டி 2—0 கோல் களால் வெற்றியீட்டியது,

குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக்கழகத்திற்கும் பாஷை யூர் சென்ற் அந்தனிஸ் விளை யாட்டுக்கழகத்திற்குமிடை யில் நடைபெற்ற போட்டியில் பாஷையூர் சென்ற் அந்தனிஸ் கோஷ்டி 7-3 கோல்களால் வெற்றியீட்டி சம்பியனைத் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ்ப்பாண உதவி அர சாங்க அதிபர் திரு. மாணிக்க வாசகர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சம்பியனைத் தெரிவுசெய்யப்பட்ட கோஷ்டி களுக்குப் பரிசில்கள் வழங்கி னார். [அ]

# பதவி உயர்வு

[சரவணை]

ஊர்காவற்றுறைகரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய அதிபர் திரு. செ. கதிர்காமத் தம்பி 2ம் தர அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

ஊர்காவற்றுறை புனித அந் தோனியார் கல்லூரியில் பல வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் இக் கல் லூரியின் பழைய மாணவரா வார்.

# உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(மாவிட்டபுரம்)

யாழ். பாடசாலைகள் உதை பந்தாட்டச்சங்க ஆதரவில் நடந்த 2ம் பிரிவு உதைபந் தாட்டப் போட்டி ஒன்றில் காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி 1—0 கோலால் வண்ணை வைத்தீஸ்வர வித்தி யாலயத்தை வென்றது.

காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் இப் போட்டி நடந்தது.

இதே மைதானத்தில் மேற் படி இரு பாடசாலைகளும் மோதிய 3ம பிரிவுப் போட்டி யொன்றும் இடம்பெற்றது. அதிலும் நடேஸ்வராக்கல்லூ ரியே வெற்றிபெற்றது. நடேஸ் வரா வீரர்கள் 6 கோல்களைப் போட்டனர். வைத்தீஸ்வரா ஒரு கோலையும் போடவில்லை. இப்போட்டிகளுக்கு திரு. முருகேசு நடுவராக இருந்தார்.

யாழ் விளையாட்டரங்கில் நடந்த 1ம் பிரிவு போட்டி யொன்றில் நடேஸ்வராக் கல்லூரியும், மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதிய போது நடேஸ்வரா 3—1 கோலால் வென்றது,

யாழ். இந்துக் கல்லூரியும் யாழ் மத்திய கல்லூரியும் மோதிய மற்றொரு 1ம் பிரிவுப் போட்டியில் மத்தியகல்லூரி 4—1 கோல்களால் வென்றது. இப் போட்டிகளுக்கு திரு. கணேசலிங்கம் நடுவராக இருந்தார்.

# 'ஏரொபுறட்' விமானத்தை கடத்திய இருவர் துருக்கியில் தஞ்சம் கோருகின்றனர்!

## தமது நாட்டு விமானத்தையே திசை திருப்பிச்சென்ற துணிகரம்!

அங்காரா, நவ. 8

சோவியத்தின் 'ஏரோபுளட்' விமானமொன்றை கடத்திவந்து தமக்கு அரசியல் புகலிடம் வேண்டுமென இருவர் துருக்கியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்த இரு கடத்தல்காரர்களும் சோவியத் யூனியனை பிறப்பிடமாகக்கொண்டவர்களென்றும், கிழக்கு ஜெர்மனியிலேயே குடியிருந்தனரென்றும் தெரியவந்தது.

விமானத்தைக் கடத்தும் நடவடிக்கையில் இவ்விருவரும் இறங்கியபோது இரண்டு பயணிகளும், ஒரு விமானச் சிப்பந்தியும் காயமடைந்தனர். கடத்தல்காரரிடம் நிஜமான ஆயுதங்கள் இருக்கின்றனவென்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். ஆயினும் இதுபற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (கி)

## 'இமயம்' காரோட்டப்பாதை உலகில் தலைசிறந்தது!

### கென்ய வீரர் கருத்து

புதுடில்லி, நவ. 8

''இமயமலைச்சாரலின் காரோட்டப்பந்தையப் பாதை உலகில் தலை சிறந்த பந்தயப் பந்தயப்பாதைகளில் ஒன்றாக விளங்குகின்றது'' என்று இமயமலைச் சாரலில் நடைபெற்ற வருடாந்த காரோட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்ற கென்யா நாட்டு வீரர் ஜெயன்ஷா தெரிவித்தார்.

இவர் மேலும் கூறுகையில், கவர்ச்கசிரமான பாதையாக விளங்கும் இமயமலைப் பாதை, பற்றி சிறந்த முறையில் விளம்பரம் செய்தால் பெருந் தொகையான உல்லாசப் பயணிகளை இந்தியா கவர முடியுமென்றும், சாரதிகளுக்கு உற்சாகத்தை இப்பாதை வழங்குகின்றதென்றும் தெரிவித்தார்.

இவ்வருடாந்த இமயமலை காரோட்டப் பந்தயத்தில் உலகநாடுகள் பலவற்றின் காரோட்டப்பந்தைய வீரர்கள் பலர் கலந்துகொண்டனர். உலகசந்தையில் முன்னணியில் விளங்கும் மோட்டார் கார் ரகங்களும் பங்குபடுத்தப்பட்டன. (கி)

## திடீர் இராணுவ புரட்சி

லண்டன் நவ 8

'அப்பர் வோல்ட்டா' என்ற வடமேற்கு ஆபிரிக்க நாட்டில் திடீர் இராணுவ புரட்சி மூலம் ஆட்சி கைப்பற்றப்பட்டுள்ளதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் அயல் நாடான 'டுனீஷியாவே' இத்தகவலை வெளியிட்டுள்ளது. பதவியிலிருந்த கேர்ணல்சார் போவின் அரசாங்கமே வீழ்த்தப்பட்டதென்றும் புதிய ஆட்சியாளர்கள் அன்றுட வாழ்க்கையை வழமைபோல் தொடருமாறு மக்களை கேட்டுள்ளனரென்றும் டுனீஸிய செய்திஸ்தானம் மேலும் தெரிவித்தது. (கி)

## "இந்தியாவில் உறுதியான அரசியல் நிலை!

### ஜெனரல்ஹக் கருத்து

கோலாம்பூர் நவ 8

''இந்திய அரசியல் உறுதியான நிலையில் காணப்படுகின்றது. பாகிஸ்தானில் தற்போதே உறுதியான ஒரு நிலை ஏற்படத் தொடங்கியுள்ளது'' என்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் மலேஷியாவின் தினசரிப்பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்தார்.

ஜெனரல் ஹக் மேலும் தமது பேட்டியில் பாகிஸ்தானில் நெடுங்காலமாக அரசியல் நிலை சீரற்றிருந்ததென்றும் இதற்கு திடமான கொள்கைகளையுடைய அரசியல் வாதிகள் இல்லாதிருந்ததே காரணமென்றும் ஆனல் நிலைமை தற்போது மாறிவருவதாகவும் சிறந்த அரசியல் உறுதிப்பாட்டை வழங்குவதே தமது நோக்கமென்றும் தெரிவித்தார். [கி)

## சீனவுடன் தொடர்பு கொள்ள தலாய்லாமா விருப்பம்

புதுடில்லி, நவ, 8

திபெத்திலிருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள சமயத் தலைவர் தலாய்லாமா சீன அரசாங்கத்துடன் நேரடித் தொடர்பு கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். [வெ]

## நடிகை எலிசபெத்ரெய்லர் 7வதுதடவை விவாகரத்து!

லண்டன், நவ 8

பிரபல ஹாலிவூட் நடிகை எலிசபெத் ரெய்லர் ஏழாவது தடவையாக விவாகரத்துச் செய்துள்ளார்!

இம்முறை விவாகரத்துக்குள்ளானவர் இவரது ஆறுவது கணவராவார். இவர் ஒரு அமெரிக்கச் செனட்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகை எலிசபெத் ரெய்லர் தமது சக நடிகரான றிச்சர்ட் பேர்ட்டன் என்பவரை இரு தடவைகள் விவாகரத்துச் செய்திருந்தார்.

'ஹாலிவூட்' திரைப்பட உலகில் தமக்கெனத் தனியிடத்தை வகித்த எலிசபெத் ரெய்லரை மண புரிந்தவர்கள் அனைவரும் அரசியல், திரைப்படம், பெருங் கைத் தொழில்கள் என்பவற்றில் முக்கிய புள்ளிகளாக விளங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இவரது ஒவ்வொரு விவாகரத்தும் உலகின் கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை. (கி]

## குறைந்தநேரதிரைப்படங்களை தயாரிக்க நிதியுதவி

சென்னை, நவ 8

குறைந்த நேரத்தைக் கொண்ட திரைப்படங்களுக்கு தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் நிதியுதவி வழங்கவுள்ளது. இத்திரைப்படங்கள் அரைமணித்தியாலம் முதல் ஒரு மணித்தியாலம் வரையிலான நேரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

புதிய திரைப்பட தயாரிப்பாளர்களையும், திரைப்பட தயாரிப்புக்களையும் உருவாக்கும் விதத்தில் ஊக்கமளிக்கவே இவ்வாறு குறைந்தநேர திரைப்படங்களுக்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளதாக தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது,

குறைந்தநேர திரைப்படங்களை தயாரிக்க ஊக்கமளிப்பதன் மூலம் வழமையானநேர அளவுகளைக்கொண்ட திரைப்படங்களை நல்ல முறையில் எதிர்காலங்களில் பெற்றுக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

குறைந்தநேர திரைப்படங்களில் சிறந்தனவற்றை தொலைக்கட்சி மூலமாக ஒளிபரப்புவதென்றும், வெளிநாடுகளில்இத்தகையதிரைப்படங்களுக்கு அதிக வரவேற்பு காணப்படுவதால், அந்நியசெலாவணியைப் பெற்றுக்கொள்ளமுடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

திரையரங்குகளிலும் இரு குறைந்தநேர திரைப்படங்களை ஒன்றுசேர்த்து வெளியிட முயற்சிகள் எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி]

## ஈரான் - ஈராக் மீண்டும் மோதல்!

லண்டன், நவ 8

ஈரானுக்கும் ஈராக்குக்குமிடையே மீண்டும் மோதல்கள் ஆரம்பித்துள்ளன.

ஈராக்கிய விமானங்கள், ஹெலிகாப்டர்கள் முதலில் ஈரானின் வலயத்தினுள் புதிய தாக்குதலை ஆரம்பித்தனவென்றும், இதனைத் தொடர்ந்து ஈரான், ஈராக்கின் விமானமொன்றை சுட்டு வீழ்த்தி பதில் தாக்குதலில் மும்மரமாக இயங்கி வருகின்றதென்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈரான்–ஈராக் படைகளுக்கிடையே கடும் மோதல்கள் சம்பவித்த பிரதேசங்களில் பெருமளவு சடலங்களும், இராணுவ போர்த்தளபாடங்களும் அநாதரவான நிலையில் காணப்படுகின்றனவென்று தெரிவிக்கப்பட்டது. [கி)

## தொழிற்கட்சி வெற்றி

கான்பெரா, நவ, 8

தெற்கு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற மாநில ஆட்சி மன்றத்தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிற்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இந்த தேர்தலில் தொழிற்கட்சி 47 ஆசனங்களில் 23 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஆளும் லிபரல் கட்சியின் இத்தோல்வி அவுஸ்திரேலியாவின் மத்திய அரசிலும் பாதிப்பை ஏற்படுத்துமென்று தொழிற்கட்சித் தலைவரொருவர் தெரிவித்துள்ளார். [வெ

## துருக்கியில் புதிய அரசியல் அமைப்பு: 90 வீதமக்கள் ஆதரவு!

அங்காரா, நவ. 8

புதிய அரசிலமைப்பை உருவாக்குவதற்கு நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் 90 சத வீதமான துருக்கி மக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

அரசியல் அவதானிகள் அரசுக்கு ஆதரவாக 60 முதல் 65 சதவீதம் வரையிலான வாக்குகள் கிடைக்குமென ஏற்கனவே ஊகம் தெரிவித்திருந்தனர்.

இராணுவ ஆட்சி நிலவும் துருக்கி தேசத்தில் மக்களின் இப்பெரும் ஆதரவு மக்கள் ஆட்சியைத் தோற்றுவிக்க வழி வகுக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போது ஜெனரல் எவ்வின் இராணுவ ஆட்சியாளராக இருந்துவருகின்றார். (கி)

## இந்திராவின் 5 அம்சத்திட்டம்

### கட்சி ஆதரவாளர் பாதயாத்திரை

சென்னை, நவ 8

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் ஐந்தஅம்சத் திட்டத்தை விளக்கும்வகையில் தமிழக இந்திரா காங்கிரஸ் அமைப்பாளரான திருமதி மரகதம் சந்திரசேகர் பாதயாத்திரையொன்றை மேற்கொண்டுள்ளார்.

திருச்சி சமயபுரம் பகுதியில் நடைபெறும் இப்பாதயாத்திரையில் நூற்றுக்குமதிகமான கட்சி ஆதரவாளர்கள் திருமதி சந்திரசேகரத்துடன் கலந்து கொண்டுள்ளனர்

இப்பாதயாத்திரை கிராமங்களினூடாகச் சென்றபோது பல மக்கள் தமது தேவைகள் பற்றிய மனுக்களை திருமதி சந்திரசேகரத்திடம் கையளித்தனர். [கி]

## நெல்லியடியில் 'அவர்கள்' நடத்திய அட்டகாசம்!

(கரவெட்டி)

'டிரக்' வண்டி ஒன்றில் வந்தவர்கள் செய்த அட்டகாசத்தினால் பஸ் நிலையத்தில் நின்ற பெண்கள் பயங்கொண்டு ஓட்டம் பிடித்தனர்!

இச்சம்பவம் நெல்லியடியில் இரவு 9–10 மணியளவில் நடந்தது.

நெல்லியடிக்கு வந்த பிரஸ்தாப கோஷ்டியினர் தமது 'டிரக்' வண்டியை நெல்லியடி வீதிகளில் வேகமாக ஓட்டிச் சென்று வீதிகளில் சென்றவர்களைப் பயமுறுத்தியதுடன், முதலாம் படக்காட்சி முடிந்து வீடு திரும்புவதற்காக நெல்லியடி பஸ் நிலையத்தில் நின்ற பெண்களையும் துரத்தினர்கள். இதனால் பயங்கொண்டபெண்கள் என்னசெய்வதென்றுதெரியாது அபயக்குரலுடன் விழுந்தடித்துக்கொண்டு அருகிலுள்ள ஒழுங்கைகள், வீடுகளுக்குள் ஒழிந்துகொண்டார்கள். இச்சம்பவம் நெல்லியடியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

### மணிவாக்கு

உன்னால் முடிந்த நன்மையைச் செய்!
உன்னால் கூடிய வழிகளில் செய்!
உன்னால் கூடிய இடங்களில் செய்!
உன்னால் முடிந்த காலங்களில் செய்!
உன்னால் முடிந்த யாவருக்கும் செய்!

— ஜோன் வெஸ்லி.

# நமது நோக்கு

## தேசிய அரசாங்கமா? அல்லது ஜனநாயக சர்வாதிகாரமா?

கிறிஸ்தவ மிஷன் பாடசாலைகளில், சைவப் பிள்ளைகள் உட்பட எல்லோரும் கடவுள் வணக்கம் [Lords Prayer] மனனம் பண்ணி கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடும் கிட்டாய வழக்கம் சுமார் 50 வருடங்களுக்கு முன் நிலவியது.

ஆங்கிலப் பாடசாலைகளில் கீழ் வகுப்புகளிலேயே அது ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது. ஆங்கிலம் புரியாத சில மாணவர்கள் "Thy Kingdom Come" என்பதை 'தாய்க்குய தங்கம்' என்று சொல்வது சாதாரணமாயிருந்தது; ஆசிரியர் சிரிப்பதைவிடத் திருத்துவது கடினமாயிருந்தது. இதுபோன்று எங்கள் நாட்டு அரசியலில் புழங்கிவரும் பதங்கள் சில ஆரம்பத்தில் கொண்டிருந்த கருத்து காலகதியில் இன்னொன்றாக, நேர்மாறாக, பிள்ளையாரைப் பிடிக்க பெருச்சாளியாக முடிவதுமுண்டு. மக்கள் மயக்கமடைய இந்த நிலை உருவாகிறது.

அரசாங்க பாடசாலை என்றால் பாடசாலை நேரத்தில் பிள்ளைகள் தங்குமிடம், மற்றைய நேரத்தில் டியூஷன் கடைகளுக்குப் போய் கல்வி வாங்க வழிகாட்டுமிடம்.

'இலவசக் கல்வி' யென்றால் வகுப்பு ஆசிரியர்கள் வீட்டில் பணம் கொடுத்துப் படிக்கும் கல்வி முறை.

'இலவச வைத்தியம்' என்றால் வைத்திய நிபுணரைத் தனியார் ஆஸ்பத்திரியில் சந்தித்து, பெரிய ஆஸ்பத்திரிகளில் நல்ல இடம் பிடிக்கும் உபாயம்.

இவற்றை நாம் சரியெனக் கொள்ளவில்லை. நோக்கத்துக்கும் சாதனைக்குமுள்ள இடைவெளியால் மக்கள் இந்த முடிவுக்கு வந்துவிடுகின்றனர்.

'தேசிய அரசாங்கம்' இந்த நாட்டுக்கு ஒரு புதிதான பண்டமல்ல.

இங்கிலாந்திலே இரண்டாவது உலக மகா யுத்தம் நடைபெற்றபோது ஒரு தேசிய அரசாங்கம் ஆட்சி நடத்தியதும் யுத்தம் முடிய முன்னரே அது கலைக்கப்பட்டதும் சரித்திரமாய்விட்டது.

அந்த யுத்தத்தின் கதாநாயகர் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில். அடுத்து வந்த தேர்தலில் ஆட்சியை இழந்ததும் பிரதமர் அட்லி தலைமையில் ஆட்சிக்கு வந்த தொழிற்கட்சி இந்திய சுதந்திரத்துக்கு வழிகோலியதும் இன்றைய சரித்திரம்.

உலகம் எதிர் பார்த்தது போல சேர்ச்சில் மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால், இந்தியாவுக்கு சுதந்திரம் 1947-ல் கிடைத்திருக்குமா? விடை எவருக்கும் தெரிந்த விடயம்.

இலங்கைக்கும், பிரிட்டனுக்கும் அரசியல் முதிர்ச்சியில் 'ஏணி வைத்துப்பார்க்கும் நிலை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இருப்பினும் பிரிட்டனில் பாராளுமன்ற ஆட்சிக்கு நாம் ஒருபடி மேலாகவுள்ளோம்.

1965-ல் ஆரம்பமான பிரதமர் டட்லியின் தேசிய அரசாங்கம் என்ன நெருக்கடி நிலையில் உண்டானதென்பது இலகுவான ஆராய்ச்சிக்குரிய விடயம். அமைச்சர் திருச்செல்வம் அமைச்சர் சபையில் இருந்த காரணம் அதற்கு தேசிய அரசென்ற கௌரவத்தைக் கொடுத்து சகல கட்சிகளும் ஒருங்கே சேர்ந்து ஒரு நெருக்கடி நிலையைச் சமாளித்த சாதனை எதுவும் அதற்கிருக்கவில்லை.

இன்று மீண்டும் தேசிய அரசாங்க அமைப்பு அரசியல் வட்டாரங்களில் கடுமையாக அடிபடுகின்றது. ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குப் பிடித்தமான எதுவும் வீண்வதந்தியாக இருக்காது. செயல் வீரரென்றளவில் எண்ணித் துணிந்த காரியம் நிறைவேற்றப்படும் சாத்தியம் பெருமளவுக்குண்டு.

இன்றைய நெருக்கடி 'அபிவிருத்'தித் தொடர்ச்சியென்று கொள்ளப்படுகிறது. நாட்டின் பொருளாதாரம் மோசநிலையில் இருப்பதால் அரசு எடுத்துக் கொண்ட திட்டங்கள் முடிவடைவதற்கு ஸ்திரமான தொடர்ச்சியான ஆட்சி இன்றியமையாததெனக் கருதப்படுகிறது.

அதன் விளைவாகப்பொதுத் தேர்தலில் நடைபெறக்கூடிய 'திருவிளையாடல்'களைத் தவிர்த்து, பொதுஜன வாக்கெடுப்பில் வெற்றி பெற்றால் ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க வசதி ஏற்படுமெனக் கருதப்படுகிறது.

பொதுத்தேர்தல் நடைபெறவேண்டுமென்ற எதிர்க்கட்சிகள் கோஷம், அவசரகாலத்தில் 'பொதுஜன வாக்கெடுப்பு முறையற்றதென்ற ஜனநாயக உரிமைகள் இயக்கத்தின் அவசரத் தந்தி போன்றவை ஜனாதிபதியிடம் பலிக்குமென்பது சந்தேகம்.

ஜனாதிபதி தேர்தலின் முடிவில் வெளியான 'இரு பெருங் கட்சிகள் பலம் இன்று ஒரு கட்சியாகும்' அவல நிலை தென்படுகின்றது. நேற்று சுதந்திரக் கட்சிக்குத் தூணாக நின்றவர்கள் சிலர் இன்று ஐ. தே. கட்சியின் 'தேசிய அரசாங்கத்துக்குள் புகும் சூழ்நிலை. என்னே அரசியல் முதிர்ச்சி! என்னே அரசியல் கட்சி ஆட்சி!

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவரை ஈன்றெடுத்த தமிழர் விடுதலைக் கூட்டணி,-ஜனநாயக உரிமைக்குத் தொடர்ந்து போராடுவோமென்று குரலெழுப்பு தமிழர் கூட்டணி-தலைமையைத் தற்காலிகமாகக் கைவிட்டு தேசிய அரசில் சேரலாமென்று யூகித்தால் அது கற்பனையென்ற குற்றத்துக்கு ஆளாவோமா?

எது என்னவானாலும், மக்கள் ஜனாதிபதி ஆட்சியின் ஒரு பெரும் அம்சத்துக்கு ஆதரவளித்திருக்கின்றனர்; பாராளுமன்ற ஆட்சிபற்றிபோனால் காரியமில்லை என்று மக்கள் நினைத்துவிட்டால் இவ்வளவு காலமும் எம்.பி மார் வெட்டிப்பிடுங்கினதென்ன?

தேசிய அரசாங்கம் சுத்த ஜனாதிபதி ஆட்சியாக அமையும். அது ஜனநாயக சர்வாதிகாரமாக மாற முடியாதா?

ஆட்சித்திறனுடைய இன்றைய ஜனாதிபதி நாட்டுக்கு நன்மையான முறைகளை அனுசரித்து அபிவிருத்தியில வெற்றி காணக்கூடும். வெற்றியோ தோல்வியோ மாற்று அரசு அமைக்கும் எதிர்க்கட்சி அருகிப்போமென அஞ்ச வேண்டியிருக்கிறது.

பசியால் வாடும் மக்களுக்கு சோற்றுப்பானை அவசிய தேவை; அதே போல் மாற்றுப் பானையும் தயாராயிருக்க வேண்டுமல்லவா?

---

### நவீன பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி

# பனந்தொழில் வல்லுநர்களை உருவாக்கவேண்டும்

## இந்திய அறிஞர் ஆலோசனை

[புலோலி]

"இந்தியாவில் உள்ள ஆறு கோடி பனைமரங்களில் நான்கு கோடி பனைமரங்கள் தமிழகத்தின் நிரந்தரச் செல்வமாகத் திகழ்கின்றன, தமிழக அரசுபனைமரத்தை தேசியமரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது எதிர்காலத்தில் கூடுதலானோர் சீவல தொழிலில் ஈடுபடுவதன்மூலம் வேலையில்லாப் பிரச்னையையும் தீர்த்துவைக்க முடியும். நவீன சீவல் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவி அதன் மூலம் இந்த நாட்டில் பல பனைத் தொழில் வல்லுநர்களை உருவாக்கவேண்டும்"

இவ்வாறு தமிழ் நாட்டிலிருந்து இலங்கை வந்திருந்த பனம்பொருள் நிபுணர் கே. சம்பந்தம், பனம்பொருள் அபிவிருத்தி பற்றித் தெரிவிக்கையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து குறுப்பிட்டதாவது:

இப்பனை விதைகள் கடல் மார்க்கமாகத் தென் ஆபிரிக்கா, மலேயா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் பரவி அங்கு வளர்வதற்கும் சாதகமாக இருப்பது ஏற்றுமதியின் துரிதத்தின்மூலம் தெரியவருகின்றது

### இலங்கையில்

இலங்கையில் மரம் ஏறுபவர்கள் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. பத்துக்குமேற்பட்ட மரங்களில் ஏறமுடியாமல் இருப்பதே இதற்குக் காரணம். இங்கு உள்ள பனைமரங்கள் 60 அடியிலிருந்து 70 அடிவரை உயரமாக வளர்ந்து உள்ளன. இவ்வளவு உயரமான மரத்தில் ஏறுவதனால் களைத்துவிடுகின்றனர். மண்டைதீவுப் பகுதியில் பனைகள் தமிழ் நாட்டைப்போன்று நன்குவளர்ந்து நிறையக் காய்ப்பதைக் காண முடிகின்றது. கட்டையான பனைமரங்களில் ஏறுவதன் மூலம் உயரமான பத்துப் பனைமரங்களில் ஏறுபவர் இருபது பனைகளில் ஏறமுடிவதுடன், கூடுதலான வருவாயையும் பெறமுடியும்.

பருத்தித்துறையிலுள்ள பனைகள் 65 அடி உயரத்திற்கு மேல்வளர்ச்சியடைந்துள்ளன. இப்பனைமரங்களில் கழுத்துப் பகுதி சிறுத்து இருப்பதனால் தொடர்ந்து அதிக நாட்கள் பதநீர் உற்பத்தியைத் தரமுடியாது. நவீன முறைகளைப்புகுத்தி மரம் ஏறும் இயந்திரங்களைக் கண்டுபிடித்தல் வேண்டும். இந்த இயந்திரம் மூலம் பனைமரங்களில் இலகுவாகவும் சுலபமாகவும் ஏறமுடியும். இக்கருவி கண்டுபிடிக்கப்பட்டதும் வேலையற்ற இளைஞர்களுக்கு பனைமரம் ஏறுவதில் பயிற்சி அளிக்கவேண்டும் இப்பயிற்சியின்போது பனைமரம் ஏறுவதற்கான கருவிகளைப் பயிற்சியாளர்களுக்கு வழங்குவதுடன் அவர்கள் பயிற்சி பெறும்காலத்தில் வேதனம் வழங்கி ஊக்குவிக்க வேண்டும். இதனால் பனைமரம் ஏறுவதில் இளைஞர்கள் முன்வருவார்கள்.

உடனடியாக நாம் விஞ்ஞான முறையில் கட்டையான பனைமர இன விதைகளைத் திட்டமிட்டு நடுகை செய்ய வேண்டியது அவசியம். தமிழ் நாட்டில் 70 ஆயிரம் பெண்கள் பனங்கட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்கள இவர்கள் 12 கோடி ரூபா பெறுமதியான பனங்கட்டியை வருடந்தோறும் உற்பத்தி செய்துவருகின்றனர்

சுத்தமான முறையில் பதநீர் விநியோகம் செய்வதன் மூலம் வருவாயை ஈட்டலாம், பதநீர் உற்பத்தி நிலையங்களை நிறுவிப் பதநீரைப் பதப்படுத்தி விற்பனை செய்யலாம். விற்பனை செய்து மீதியான பதநீரைக்கொண்டு பனஞ்சீனி வெல்லம் ஆகியவற்றை உற்பத்தி செய்யலாம்.

குடும்பம் ஒன்றிற்கு நூறு பனைகள் இருக்குமாயின் அக்குடும்பம் கஷ்டமின்றிச் சீவிக்க முடியும். தும்பு, சார்வோலை, நார முதலிய பொருட்களையும் உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்யலாம்.

### பனந்தும்பு

இங்குள்ள பனை மரங்களின் ஓலைகள் லட்சக்கணக்காக வீணாகவிரயமாகின்றன. பனைத் தொழில் வல்லுனர்களின் பற்றாக்குறை காரணமாக பதநீர் இறக்கும் தொழில் மந்தமாகக் காணப்படுகின்றது வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வந்து இங்கிருந்தே முதல தடவையாகப் பனம்தும்பு ஏற்றுமதியினை மேற்கொண்டனர். அதன்பின்புதான் தமிழகம் வந்துபனம்தும்புஏற்றுமதியை ஆரம்பித்தனர். இப் பனம்தும்பு ஏற்றுமதி மூலம் இப்போது தமிழ்நாடு பல கோடி ரூபாய்களை வெளிநாட்டுச்செலாவணியாக ஈட்டி வருகின்றது.

இலங்கையும் பனம்தும்பு ஏற்றுமதிமூலம் 40 லட்சம் ரூபாவை சம்பாதித்திருப்பதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உதவி அதிகாரி திரு. பீ. என் எஸ் விஜேரத்தின என்னிடம் தெரிவித்தார். தும்பை உற்பத்திசெய்து வழங்கினால் அவற்றைச் சந்தைப்படுத்துவது சாயம் ஊட்டுவது பற்றிய ஆலோசனைகளையும் வசதிகளையும் அபிவிருத்திகளையும் செய்யமுடியும். தும்பு உற்பத்தியை மென்மேலு கூட்டவேண்டும். இதற்கு ஏற்ற வடலி மரங்கள் உள்ளனவா என்பதுதான் முக்கியம. இரு வருடங்களுக்கு ஒருமுறை தான வடலிமரத் தும்புக்காக அறுக்கவேண்டும். வடலிமரத்தைப் பொறுத்தே கறுப்பு வெள்ளைத் தும்புகளைப் பெற முடியும.

இலங்கைத்தும்பு மிகவும் தரமானது உயர்ரக தும்பு தயாரிப்பதில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும. வருடம் முழுவதிலும் தும்பு தயாரிப்பது இலகுவானது அல்ல. தும்பு உற்பத்திக்கான போதிய பத்தல்கள் கங்குமட்டைகள்) இன்றி தமிழகத்தில் கஷ்டப்படுகின்றனர், ஆனல் இங்கு பத்தல்கள் கவனிப்பார் இன்றித் தேங்கிக்கிடக்கின்றன. பனம்தும்பு உற்பத்தியாற்றி வல்லுநர்களுக்கு மூன்று கால மாதப் பயிற்சி அளித்து அதன் மூலம் இங்கிருந்தே தரமான பனம்தும்பை ஏற்றுமதி செய்ய முடியும்.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை ஐந்து ஆண்டுகாலத் திட்டத்தினை மேற்கொண்டு இத் திட்டத்தின் கீழ் பனம்பொருள் உற்பத்திக்காக மத்திய தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை நிறுவி இப்பயிற்சி நிலையத்துக்கான பயிற்றுநர்களை இந்தியாவில் இருந்து வரவழைத்துப் பயிற்சி கொடுக்கவேண்டும். தமிழகத்திலிருந்து 30 லட்சம் பனம் உற்பத்திப் பொருட்கள் வெளி

[5ம் பக்கம் பார்க்க]

---

## தேர்தல்முறையின் சிறப்பு பற்றி பாரதியார் கருத்து

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 'வாக்குச்சீட்டு' என்ற தலைப்பிட்டு ஒரு கட்டுரையில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா அநேக தேசங்களில் சட்டங்கள் செய்யும் சபைக்கு "ஜனசபை" என்று பெயரிட்டு சபைக்காரர் (மெம்பர்) ஒவ்வொருவரையும் பொதுஜனங்கள் வாக்குச்சீட்டுப்போட்டு நியமனம் செய்யும வழக்கம் பலவாறாக நடைபெற்றுவருகிறது. ஜனசபையார் நியாயமில்லாத சட்டங்கள்செய்தால் அடுத்த தடவை ஜனங்கள் தம்மைத் தள்ளிவிடுவார்கள் என்ற பயம் இருக்க வேண்டும். ஜனங்களுடைய அதிகாரத்துக்குட்படாத சட்டசபையார் மனம்போனபடியெல்லாம் சட்டம் போடுவார்கள். அதிலே பல விபரீதங்கள் ஏற்படும். வாக்குச்சீட்டு (வோட்) விஷயத்தில் பலவித அனுஷ்டானங்கள் இருக்கின்றன. இங்கிலாந்திலே வாக்குச்சீட்டுப் போடும் உரிமை சிலருக்கில்லை. பிரான்ஸ் தேசத்திலே எல்லாரும் சீட்டுப்போடலாம். அமெரிக்காவிலே பல ஜில்லாக்களிலே பெண்கள் ஜனசபைக்கு சீட்டுப்போடுகிறார்கள். இந்த முறையே தேசமுழுமைக்கும் பொதுவாக்கி, ராஜ்யத்தில் ஆணையும் பெண்ணையும் நிகராக்கிவிடவேண்டும் என்று அந்நாட்டிலே மிஸ்டர் ஹியூஸ், வில்சன் போன்ற பெரிய செல்வாக்குடைய தந்திரிகள் விரும்புகின்றார்கள். கூடிய சீக்கிரத்தில அமெரிக்காவில் எல்லா நாடுகளிலும் பெண் சீட்டு வழக்கமாய்விடும் என்று தோன்றுகின்றது. வாக்குச் சீட்டே புருஷலக்ஷணமென்று மேற்குத்தேசத்தார் சொல்லிக் கொண்டுவந்தார்கள். இப்போது பெண்ணுக்குக் கூட அந்த உரிமை இல்லாவிட்டால் இழிவு என்று தீர்மானம் செய்துவருகிறார்கள்.

# யாழ். மாவட்டத்தில் 99 பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்கள் நியமனம்

[மாவிட்டபுரம்]

யாழ். மாவட்டத்தில் நிரந்தர அதிபர் இல்லாது இயங்கி வந்த 99 பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமை புரிந்தவர்களுக்கே இந்நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்டப்பாடசாலைகள் பலவற்றில் மிக நீண்ட காலமாக நிரந்தர அதிபர்கள் நியமனம் செய்யப்படாமல் பதில் அதிபர்களின் கண்காணிப்பிலேயே அவை இருந்து வந்தன.

அதிபர் பதவியிலிருந்தவர்கள் இளைப்பாறியமையினாலும் பதவியை ராஜினாமா செய்து வெளிநாடு சென்றதாலும் இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன.

மேற்படி பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கவேண்டுமெனவும் அதே நேரத்தில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றுபவர்களை நிரந்தர அதிபர்களாக நியமிக்கவேண்டுமெனவும் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுக்கப்பட்டுவந்தது.

அண்மையிலேயே கல்விச் சேவை ஆணைக்குழு மேற்படி பதில் அதிபர்களை நிரந்தர அதிபர்களாக நியமனம்செய்து அதிபர்களது வெற்றிடங்களை நிரப்ப ஒப்புக்கொண்டிருந்தது.

30-4-80 இலிருந்து பதில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களை அவர்களது சேவையையும், திறமையையும் கணித்து நிரந்தர நியமனம் வழங்க மேற்படி ஆணைக்குழு முடிவுசெய்திருந்தது.

இதற்கமைய 99 பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் 24 பேர் கல்விச் சேவை 5ம் வகுப்பு தரத்திற்கு தரமுயர்வும் பெற்றுள்ளனர். 30 பேர் 4ம் தர அதிபர்களாகவும் 45 பேர் 3ம் தர அதிபர்களாகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

இந்நியமனத்தின் மூலம் நீண்டகாலமாக நிரந்தர அதிபர்கள் இன்றி செயல்பட்ட 99 பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாளை நடைபெறும்

# வவனியா மாவட்டப் பாடசாலைகள் நாடகப்போட்டி

[வவனியா]

இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தின் ஆதரவில் வவனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி நாளை 10ம் திகதி வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியினை வவனியா மாவட்ட குடும்ப நலக்குழு ஏற்பாடுசெய்துள்ளது. அதே வேளை இம்மாதம் 28ம் திகதி வடமாநிலக் குடும்பநலத் தொண்டர்களுக்கான வருடாந்தத் தொண்டர் மாநாடு வவனியாவில் நடைபெறவுள்ளது.

வவனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ள இம்மாநாட்டுக்குப் பிரதம அதிதிகளாகக் கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானும், எதிர்க்கட்சி முதல்வரும் த. வி. கூட்டணிச்செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர் என வடபிராந்தியக் குடும்ப நல செயலாக்கமுகாமையாளர் திரு கலா பரமேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவனியா முதலான பகுதிகளிலிருந்து சுமார் 1200 தொண்டர்கள் அரச சுகாதார ஊழியர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

வவனியா மாவட்ட திட்டக் குழுத்தலைவர் திரு. ஆர். வி. வில்வராசா நாடகப்போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

# கூ. சங்கக்கிளை நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை வடமேற்கு ப. நோ. கூ. சங்க 8வது கிளையின் நிர்வாக சபைக்கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது திரு. க. பதமநாயகம் தலைவராகவும், திரு மு. சிவராசரத்தினம் உபதலைவராகவும், திரு. காதிசமூர்த்தி செயலாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பெற்றனர்.

திரு. த. சிற்றம்பலம், திருமதி ஆ. வேதநாயகி, திரு. க. அருளானந்தம், திரு. கி. சோதிநாகரத்தினம், திரு. வி. விஜயமோகன், திரு. ஆ. பாக்கியநாதன ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பெற்றனர். (அ)

யாழ். நகர சுகாதாரச் சீர்கேடு:

# தீர்வுகாண மேயர் முயற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு தீர்வு காண்பதற்கு யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத் தலைவர் திரு இராஜா விசுவநாதன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாண நகரத்தில் குப்பைகூளங்கள் தேங்கிக் கிடப்பதால் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்பட்டுள்ளதாக அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாண மாநகராட்சி மன்றப் பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் திரு எஸ். சிறிலும் திரு என் டி. செல்லத்துரையும் கண்டித்துப் பேசியிருந்தனர் இதுசம்பந்தமான செய்தியும், ஆசிரியத் தலையங்கமும் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

இதனைத் தொடர்ந்துயாழ்ப்பாண மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம், சுகாதாரக்குழுத் தலைவர் திரு எஸ். சண்முகராசா, சுகாதாரப் பரிசோதகர்கள். மற்றும் சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்களை கூட்டி, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத் தலைவர் திரு இராஜா விசுவநாதன் ஆலோசனை நடத்தினர்.

ஒருவாரத்தக்குள் யாழ். நகரத்திலுள்ள சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதென்று இம் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. [மா]

# "தொழிற்சங்கங்களில் அரசியல் ஈடுபாடு கூடாது!"

## ஆசியப்பிரதிநிதி குர்ணும்சிங் கருத்து

(மாவிட்டபுரம்)

'தொழிற்சங்கங்களில் அரசியல் ஈடுபாடுகள் இருக்கக் கூடாது அவை சுதந்திரமாகச் செயல்பட்டுத் தமது பிரச்னைகளின் தீர்வுக்காகமட்டுமே உழைக்கவேண்டும். ஆசிரிய தொழிற் சங்கங்களும் இவ்வாறனவையே. அவையும் சுதந்திர இயக்கமாக இயங்கவேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற பாராட்டு விழாவொன்றில் கலந்துபேசிய சர்வதேச சுதந்திரத் தொழிற்சங்க சம்மேளன ஆசிய பிரதிநிதி திரு. குர்ணும் சிங் கூறினார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி இதிபராக விருந்து அண்மையில் யாழ். பிரதேச ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரியாகப் பதவி உயர்வுபெற்றுச்சென்ற திரு. இ க. குலசேகரனைப் பாராட்டி இலங்கைத் தமிழாசிரியர் சங்க காங்கேசன் துறைக் கிளை இவ்விழாவை ஏற்பாடுசெய்திருந்தது. பண்டிதர் ச. நடராஜா தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு, குர்ணும் சிங் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'தொழிற்சங்க வாதிகளுக்கு கல்வியதிகாரி போன்ற பதவிகள் கிடைப்பது அரிது.' ஆனாலும் ஒரு தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்த திரு. குலசேகரனுக்கு இப்பதவி கிடைத்தது தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டுள்ள எமக்குப் பெருமையைத்தருகிறது. கல்விப்பணியாற்றுவதற்குப் பொருத்தமானவர் எனபதை அறிந்தே இந்நியமனத்தை வழங்கியுள்ளனர். கல்வியதிகாரிகள் ஆசிரியர்களை சுயமரியாதையுடன் நடத்தி அவர்கள் சிறப்பாகச் சேவைபுரிய வழிவகுக்கவேண்டும் ஆசிரியர்களுக்கும் கல்வியதிகாரிகளுக்குமிடையில் நல்லெண்ணம் நிலவவேண்டும்' என்று அவர் கூறினார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வனசிங்கா பேசுயில், திரு. குலசேகரன் கல்வியதிகாரியாக நியமனம்பெற்றதன்மூலம் ஒரு தொழிற்சங்கவாதியை இழந்துவிட்டாலும் அவர் ஆற்றிய சேவைகளை என்றும் மறக்கமுடியாது என்றார்.

இ. த. ஆ. சங்க காங்கேசன் துறைக் கிளைச் செயலாளர் திரு க. சுப்பிரமணியம் பேசுகையில். 'காங்கேசன் துறை நடேஸ்வரக் கல்லூரியில் குறுகிய காலம் அதிபராகக் கடமையாற்றியபோதும் அக்கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் வழிசமைத்த திரு. குலசேகரன் யாழ். பிரதேசத்தில் ஆங்கில மொழிக்கல்வியை விருத்திசெய்யவும் திறம்பட சேவை புரிவார்' என்று நம்புவதாகக் கூறினர்.

மற்றும் காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம், இ. த. ஆ. சங்க யாழ். மாவட்ட செயலாளர் திரு. சிவபாலசிங்கம், நிதிச் செயலாளர் திரு. சோதிநாதன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

# 'பாரதியாருக்கு தமிழகம் அளிக்கும் கௌரவம்!'

(யாழ்ப்பாணம்)

'மகா கவியாக இருந்தாலும், சாதாரண படைப்பாளியாக இருந்தாலும் அவர்கள் உயிர்வாழும்போதே கௌரவிக்கப்படவேண்டும். தமிழிலக்கிய வரலாற்றில் துருவ நட்சத்திரமாகவிளங்கும்பாரதியார் உயிரோடு வாழ்நாளில் மிக மோசமான வறுமையில் வாடினார். கூடிப்பேசுதற்குக் கூட உற்ற நண்பர்களின்றி உளம் நொந்தார். பணத்திற்காக அவர் தம்மை அடிமைப் படுத்தாத பெருநிலையை ஒரு போதுமே கைவிடவில்லை, எந்த மகாகவி பஞ்சத்தாலும், பண வசதியின்மையாலும் நொந்து நைந்து தமது முப்பத்தொன்பதாவது வயதிலேயே உலக வாழ்வை முடித்துக்கொண்டானோ அவனது ஞாபகார்த்த

[7-ம் பக்கம் பார்க்க]

# 57 ரூபா 9600 ரூபாவாக மாறிய விந்தை!

## காசோலை மோசடிகுறித்து விசாரணை நடக்கிறது!!

[மன்னார்]

மன்னாரிலிருந்து ஊழியர் சேமலாபநிதிக்காக மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்ட 57 ரூபா காசோலை மோசடி செய்யப்பட்டு மன்னார் மக்கள் வங்கியில் மாற்றப்பட்டு 9600 ரூபா பணம் பெறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

மன்னாரிலுள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றிலிருந்து 57 ரூபாவுக்கான காசோலை ஒன்று ஊழியர் சேமலாப நிதிக்காக மத்திய வங்கிக்கு கடந்தமாதம் 5ம் திகதி தபாலில் அனுப்பிவைக்கப்பட்டது.

இதே காசோலை கடந்த மாதம் 15ம் திகதி மன்னார் வங்கியில் மாற்றப்பட்டு 9600 ரூபா பணம் பெறப்பட்டுள்ளது.

இக்காசோலை மன்னார் மக்கள் வங்கியில் மாற்றப்பட்டு 9600 ரூபா எடுக்கப்பட்டுள்ளதாக காசோலையை மத்திய வங்கிக்கு அனுப்பிவைத்து மன்னாரைச் சேர்ந்த பிரபல வர்த்தக நிலைய உரிமையாளருக்கு கடந்த வியாழககிழமை அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவித்தலைக் கண்ட வர்த்தக நிலைய உரிமையாளர் மன்னார் மக்கள் வங்கிக் கிளைக்குச் சென்று மன்னார் மக்கள் வங்கிக்கிளையில் மாற்றப்பட்டு 9600 ரூபா பெறப்பட்ட காசோலையை தாம் 57 ரூபாவுக்கு மட்டுமே எழுதி மத்திய வங்கிக்கு அனுப்பியதாக உறுதிப்படுத்தினர்.

இதனையடுத்தே இக் காசோலை மோசடி செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இக்காசோலை மோசடிபற்றி தற்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# பனந்தொழில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிற்கு ஏற்றுமதியாகி வருகின்றன. உற்பத்திக்கு வேண்டிய வழிமுறைகளை ஆராய்ந்து அவற்றைத் துரிதப்படுத்தி உற்பத்திகளை மேற்கொண்டு சந்தைப்படுத்தவேண்டும்.

பனம் நுங்கும் 'ரின்'களில் அடைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. இந்த நுங்கிற்கு வெளிநாட்டில் அமோக கிராக்கி நிலவுகிறது.

இந்தியாவில் பனம் சீனி கிலோ ஏழு ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. கருப்பஞ்சீனியின் விலை 4 ரூபா 50 சதமாகும், ஆதலால் பனஞ்சீனி விற்பனையில் பாதிப்பு ஏற்படுகின்றது. இப்பாதிப்பை நிவர்த்தி செய்வதற்காக நாம் பனஞ்சீனியை அடிப்படையாகக்கொண்டு பனங்கோவா, ரொபி, சர்பத் போன்ற உப பண்டங்களை உற்பத்தி செய்து விற்பனைசெய்வதன்மூலம் பனசீனியின் விலையுயர்வு எம்மைப் பாதிக்கவே இல்லை. இலங்கையிலும் இத்தகைய நடைமுறையைப்பின்பற்றினால் பெரிதும் பயன் அடைய முடியும்.

இங்கு தினமும் 15 000 லீற்றா கள்ளை வணிக நிலத்தில் ஊற்றி வருகின்றனர். இவ்வாறு ஊற்றி வரும் கள்ளைப் பதநீராக மாற்றினால் பெரும் அளவு பனசீனியையும் வெல்லத்தையும் உற்பத்தி செய்து கொள்ள முடியும். ஆதலால் விற்பனைக்கு அளவான 'கள்'ளையே இங்கு உற்பத்தி செய்தல் வேண்டும். மீதியை பதநீராக மாற்றி உப உணவுப்பண்டங்களை உற்பத்திசெய்தல் வேண்டும். பனஞ்சீனி உற்பத்தியின்போது பெறப்படும் கழிவுப் பாணியைச் சாராய உற்பத்திக்குப் பயன்படுத்தலாம். இறந்த கொதிகலனில் சீனி செய்வது நஷ்டமாகையினால் சூனியக்கொப்பறைமூலம் சீனி உற்பத்தியை மேற்கொள்ளல் வேண்டும்.

தமிழகத்தில் பனைத் தொழில் வல்லுநர் ஒருவர் சராசரி எண்ணூறு ரூபாவை மானியமாகப் பெறுகின்றார். இதேபோன்று இங்கும் பனைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி மானியம் என்பன கொடுத்து ஊக்குவிக்கவேண்டும். அப்போதுதான் கூடுதலான பனம் பொருள் உற்பத்தியைப் பெறலாம்.

# வைத்திய அதிகாரிக்கு ஏற்பட்ட அதிர்ச்சி!

(மாவிட்டபுரம்)

விடுதியைப் பூட்டி விட்டு கொழும்பு சென்று திரும்பிய வைத்திய அதிகாரிக்கு அதிர்ச்சி காத்திருந்தது!

அவரது விடுதி உடைக்கப்பட்டு உடமைகள் திருடப்பட்டிருந்தனவாம்.

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக கடமைபுரியும் திரு. கணேசன் தமது விடுதியை பூட்டிவிட்டு கொழும்பு சென்றிருந்ததாகவும், பின்னர் திரும்பி வந்தபோது அவரது விடுதி உடைக்கப்பட்டிருந்ததாகவும். அங்கு அவரது 5000 ரூபா பெறுமதியான உடமைகள் திருடப்பட்டிருந்ததாகவும் காங்கேசன் துறைப் பொலிசில் புகார்செய்துள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. வி தியாகராஜா தலைமையிலானபொலிஸ் கோஷ்டி இத்திருட்டுப் பற்றி விசாரணை செய்து வருகிறது.

# ,பனையைவிடுத்து வடக்கின் அபிவிருத்தி இல்லை'

(யாழ்ப்பாணம்)

''பனம்பொருள் அபிவிருத்தி சபை ஆரம்பிக்கப்பட்டு மூன்றரை வருடங்களுக்கு மேலாகியும், கடந்த சில மாதங்களாகவே இதன் பலனை மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். இச்சபையின் அபிவிருத்தி வேலைகள் கடந்த சில மாதங்களாகவே பரவலாக்கப்பட்டுத் துரிதமடைந்து வருகிறது. வடபகுதியில் அபிவிருத்தி பற்றிப் பேசுபவர்கள் வடக்கின் இயற்கைவளமான பனையை மறந்து அபிவிருத்திபற்றிப் பேசமுடியாது.''

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் உறுப்பினர் திரு. சு. நடேசு கொடிகாமத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பனம்பொருள் அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. க நடராசாவுக்குப் பாராட்டுத்தெரிவிக்குமுகமாக கொடிகாமம் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் மேற்படி சங்கத் தலைவர் திரு. சி. இரத்தினசிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. நடேசு தொடர்ந்து பேசுகையில், ''பனையை நம்பி வாழும் வடபகுதி ஏழைமக்களின் வாழ்வில் இன்றுதான் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது கிராமப்புறமக்கள் இன்றுதான் பனைவளத்தின் பயனை அடைந்துவருகின்றனர். இதனால்தான் திரு. நடராசாவின் சேவையை மக்கள் இன்று பாராட்டுகின்றனர். இந்திய நிபுணர் திரு. சம்பந்தன் போன்றவர்களை அரசாங்கச் செலவில் இங்கு அழைத்து எமது பனைவளத்திற்கான பல ஆலோசனைகளையும் இச்சபை பெற்றுள்ளது'' என்றார்.

(வண். நி)

## சர்வதேச ஜெப வாரம் ஆரம்பம்

(அரியாலை)

சர்வதேச ஜெபவாரம் நேற்று ஆரம்பமாகியது. யாழ்ப்பாண வை. எம். சீ ஏ. யும், யாழ்ப்பாண வை. டபிள்யூ. சீ ஏ. யும் இணைந்து நடாத்திய ஜெப வார முதல் நாள் நிகழ்ச்சி யாழ்ப்பாணம் பரிசுத்த பேதுறுவானவர் ஆலயத்தில் ஆரம்பமாகியது. இவ் வாராதனையில் திரு. இராசன் கதிர்காமர் அருளுரை நிகழ்த்தினர்.

இறுதிநாள் நிகழ்ச்சி எதிர்வரும் சனிக்கிழமை யாழ். வை. எம். சீ. ஏ. மண்டபத்தின் புதிய ஜெப மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ வாலிபர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் ஆராதனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ். வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

[அ]

# வவனியா மக்களின் சிரமதானப் பணிகள்!

## அமைச்சு செயலாளர் பாராட்டு

(வவனியா)

வவனியா மக்கள், அபிவிருத்தி நலன் கருதிச் சிரமதான விஷயங்களில்பங்குபற்றுவதை சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. குணசேகரா பாராட்டியுள்ளார்.

வரட்சி நிவாரணம் வழங்குவது தொடர்பாக வவனியாக் கச்சேரியில்நடைபெற்றஆலோசனை மாநாட்டில் அவர்தமது பாராட்டைத் தெரிவித்தார்.

வவனியா அரசாங்க அதிபர் திரு. ஜே ஸி லோகேஸ்வரன் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது.

தற்போது வழங்கப்பட்டு வரும் வரட்சி நிவாரணப்படி தொடர்ந்தும் தைமாதம்வரை வழங்கப்படவுள்ளதுஎனஇங்கு தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலக் கொடுப்பனவுகள் யாவும் டிசம்பர் மாதத்திற்கு முன் வழங்கப்படவேண்டுமென அமைச்சின் செயலாளர் அரசாங்க அதிபரைக்கேட்டுள்ளார்.

அங்கவீனர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டமொன்றை வகுக்கும்படியும் அரசாங்க அதிபரை அவர் பணித்துள்ளார்.

தற்போது பிச்சைச்சம்பளம் இங்கு மிகக்குறைவாகவேவழங்கப்படுவதால் இதனை அதிகரிக்கவேண்டுமென அரசாங்க அதிபர் திரு. லோகேஸ்வரன் கேட்டதற்கு ஆவன செய்வதாக அமைச்சின் செயலாளர் உறுதியளித்தார்.

தற்போது வவனியா மாவட்டத்தில் 14,900 குடும்பங்கள் வரட்சி நிவாரணம பெறுவதாக இம்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (வ)


## காசோலைத் திருட்டுக்கு எதிராக அச்சிட்ட காசோலை

# இலங்கை வங்கியின் குறுக்குக் கோடுகள் அச்சிடப்பட்ட விசேட காசோலைகள்

### எந்தவித திருட்டுக்கும் இடமில்லாமல் பூரண பாதுகாப்பு

காசோலைகளில் மையினால் எழுதப்பட்ட ''அன்ட் கோ'', ''கணக்குள்ளவர் மட்டும்'', ''கைமாற்ற முடியாது'' போன்ற வாசகங்களை நீக்கி அல்லது மாற்றம் செய்து பணத்தைப் பெறும் ஆபத்து என்றுமுள்ள ஒன்றாகும். ஆனால், ''கைமாற்ற முடியாது'' என்ற வாசகத்தை உள்ளடக்கிய குறுக்குக் கோடுகள் அச்சிடப்பட்ட இலங்கை வங்கியின் விசேட காசோலைகளில் ஏதாவது மாற்றம் செய்ய முற்பட்டால் அவை பழுதடைந்து விடும்.

அவை மிகப் பாதுகாப்பானவை. அவற்றிலுள்ள குறுக்குக் கோடுகளை சொந்தக்காரர் ரத்துச் செய்தாலும் அவை செல்லுபடியாகாது.

மேலதிக கட்டணம் எதுவுமின்றி எமது எல்லாக் கிளைகளிலும் இக்காசோலைப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விசேடமாக, தபால் மூலம் காசோலைகளை அனுப்புவதானல் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைப் புத்தகத்தைப் பயன படுத்துங்கள்.

பணத்தைப் பாதுகாப்பதோடு தேவையற்ற தொல்லைகளும் இல்லை.








இலங்கை வங்கி


## யாழ். சேமக்காலை புதிய நுழைவாயில் திறக்கப்பட்டது

(யாழ்ப்பாணம)

யாழ். நகர கிறிஸ்தவ மக்களின் இறுதிப்பூமியாகிய யாழ். கத்தோலிக்க சேமக்காலையின் புதிய நுழைவாயிலும் காவலரணும் யாழ். ஆயர் பேரூட் பெருந்தகை இயோகுப்பிள்ளை ஆண்டகையால் ஆசீர்வதித்துத்திறந்து வைக்கப்பட்டன.

பலலாயிரக்கணக்கான ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந் நுழைவாயிலைத் திறந்து வைக்கும் திருச்சடங்கு வானம் பூமழை பொழிய அமைதியாக நடைபெற்றது.

இப்புனரமைப்புக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் பேராலயப் பங்குத் தந்தை அருட்திரு. செல்வராசா அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## சிரமதானப்பணி

(யாழ்ப்பாணம்)

மகாஜனக்கல்லூரி மாணவர்கள் பொலிகண்டி வரதராஜப் பெருமாள் கோவிலில் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர்

ஆசிரியர் திரு சுகுணச்சந்திரன் தலைமையில் சென்ற மாணவர்கள் வரதராஜப்பெருமாள் கோவிலில் அமைக்கப்பட்டுவரும் புதிய சித்திரத் தேருக்கான புதிய தேர்முட்டி அமைக்கும் வேலையிலேயே தமது சிரமதானப்பணியைச் செய்துள்ளனர். (உ)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்]

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய அதிபராகக் கடமையாற்றும் திரு. வி. த. திருநாவுக்கரசு நாவேந்தன் கல்விச்சேவை ஆணைக்குழுவினால் நிரந்தர மூன்றாந்தர அதிபராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். 1972-ம் ஆண்டிலிருந்து முறையே ஐந்தாம்தர அதிபர், நான்காம்தர அதிபர் பதவிகளை வகித்த இவர் 1976-ம் ஆண்டு பெப்ரவரி முதல் விசேட பதவித்தரம் இரண்டிற்கு உயர்த்தப்பட்டார். தற்போது மூன்றாந்தர அதிபராக பதவி உயர்வுபெற்றுள்ள இவர் பதினெட்டு வருடங்கள் உதவியாசிரியராகவும் கடந்த பத்தாண்டுகளாக அதிபராகவும் திறமையாகக் கடமைபுரிந்துள்ளார்

இவரது பதவியுயர்வு தொடர்ந்து நிரந்தரமாக ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்திலேயே நடைமுறைப்படுத்தப்படுமெனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்–காஞ்சனு
**காதலிக்க நேரமில்லை**
(புதிய பிரதி) (கலர்)

ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
**ராஜா** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் – சரிதா
**மௌன கீதங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்! பாக்கியராஜ்

**றீகல்** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சில தினங்கள் மட்டும்
**முரட்டுக்காளை**
[கலர்]

**சாந்தி** யாழ். Daily 5 Shows
'CARRIE'
Adults – Color
எதிர்பாருங்கள் நான்
(புதிய வண்ணப்பிரதி)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் – ஜோதி
**ரயில் பயணங்களில்**
(கலர்)

கடைசி வாரம்
**லிடோ** [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
**லவகுசா**

**வெஸ்லி** (மானிப்பாய்) தினசரி 6–15, 9–15, சனி,ஞாயிறு 2–30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
**ரகசியப் பொலிஸ் 115**
(கலர் – புதிய பிரதி)

**மனோகரா** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார்-ஜெய்கணேஷ்-லதா-சுபாஷினி
**அழகே உன்னை ஆராதிக்கிறேன்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்) இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
**நெஞ்சில் ஓர் ஆலயம்**
(புதிய பிரதி)
10—11—82 முதல் THE ARENA

**ராணி** (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
**என்னைப்போல் ஒருவன்**

**WINDSOR** (Jaffna) Daily 5 Shows
**'RISE AND FALL OF IDI AMIN'**
Murder, Rape and Torture — More than 500,000 people brutally murdered during IDI AMIN'S Rule———
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்——
உகண்டா ஜனாதிபதி இடி அமினின்
எழுச்சியும் வீழ்ச்சியும்--


★ புதிய கட்டடங்களை அமைப்பதற்கான

# அங்கீகாரம் பெறுவதில் புதிய மாற்றங்கள்!

(மாவிட்ட புரம்)

காங்கேசன்துறைப் பகுதியில் புதிய கட்டிடங்கள் அமைப்பது தொடர்பான அங்கீகாரங்கள் யாவும் நாடு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தான் வழங்கப்படஉள்ளது

காங்கேசன்துறைப் பட்டினப்பகுதியில் கட்டிடங்களை அமைத்தல், விசாலித்தல் தொடர்பான அங்கீகாரங்களை காங்கேசன்துறை பட்டின சபையே முன்னர் வழங்கிவந்தது. பட்டின சபை மாவட்ட அபிவிருத்திச்சபை உபஅலுவலமாக மாறிய பின்னர் இந்த உபஅலுவலகத்தால் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுவந்தது. ஆனால் தற்போது காங்கேசன்துறைப்பட்டினப் பகுதி நாடு நகர அபிவிருத்தி அதிகார சபையின்கீழ் கொண்டு வரப்பட்டு காங்கேசன்துறைப் பட்டினத்திற்கான மேற்படி சபையின் நிர்வாக அதிகாரியாக திரு. க. சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை நாடுநகர அபிவிருத்தி அதிகாரசபையின்கீழ் கொண்டுவந்து அபிவிருத்தி செய்யும்திட்டத்திற்கமையவே காங்கேசன்துறைப் பட்டினமும் இச்சபையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறைப் பகுதியில் புதிதாக கட்டிடங்களை அமைக்கவும், கட்டிடங்களை விசாலிக்கவும் மேற்படி சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இந்த அங்கீகாரத்திற்கான கட்டணங்களும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# கைதடி ஆயுள்வேத வைத்தியாசலை நோயாளருக்கு ஆற்றும் சேவை

(சாவகச்சேரி)

யாழ் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் சுமார் எண்பத்திமூன்று நோயாளர்கள்தொலைக்காட்சியைக்கண்டு களிக்க இருக்கிறார்கள்.

இத்தகவலை பாதுகாப்புச் சபையின் நிர்வாக உறுப்பினரும், பிரபல தொழில் அதிபருமான திரு சி. நவரத்தினம் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் நடந்த பாதுகாப்டச் சபையின் முதலாவது கூட்டத்தில் பேசுகையிற் குறிப்பிட்டார்.

வைத்தியசாலைப் பிரதம வைத்திய அதிகாரி திரு. ரி பியதர்சா தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

இன்று கௌரவ உறுப்பினர்களாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உங்களை மன நிறைவுடனும் சந்தோஷத்துடனும் வரவேற்கிறேன். கடந்த காலத்தில் இவ்வைத்தியசாலை சீரானமுறையில் இயங்காமையால் இதைமூடிவிடலாமோ எனக்கூட அரசாங்கம் நினைத்சதுண்டு.

"நான் இங்கு வரும்போது இங்கு குறைந்த நோயாளர்களே இருந்தனர். வைத்தியசாலை மூடக்கூடியநிலையிலிருந்தது. நண்பர் ரி. காசிநாதனின் உதவியோடு இவ்வைத்தியசாலைக்கு ஒரு பாதுகாப்புச் சபையைஅமைக்க ஏற்பாடுகள் செய்தேன்.

இப்பொழுது நோயாளரிகளின் தொகையைக்கூட்டி 83 நோயாளர்கள் தங்கியிருக்கிறார்கள், ஆனால் 150 நோயாளர்கள் தங்கி வைத்தியம்செய்யக்கூடியஇடவசதியிருக்கிறது இவ்வைத்தியசாலைக்கு தீரப்படாத நோயாளர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு வைத்தியம்செய்ய ஆயத்தமாகவிருக்கிறேன். அதற்கு நீங்கள் பெரும் உதவியாகவிருந்து என்னை உற்சாகப்படுத்தவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் எஸ். ஏ. குணரத்தினம் பேசுகையில் இவ்வைத்தியசாலையை முன்னேற்றுவதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள மேலைத்தேச, சுதேச வைத்தியர்களை அழைத்து கருத்தரங்குகள் வைத்து நோயாளர்களில் தீர்க்கமுடியாதவர்களை இங்கு அனுப்பும்படி நாம் கேட்கவேண்டும். எதற்கும் சிறப்பாக நடத்துவதற்கு நிதிவசதிவேண்டும். அரசாங்கத்திற் பெறக்கூடியதைப்பெற முயற்சிசெய்ய வேண்டும்"என்று கூறினர்.

டாக்டர் பி. இராமநாதன் பேசுகையில் மேலைத்தேச மருந்துவகைகளில் மோகம் கொண்டு தமிழ்மக்கள் சுதேச வைத்தியத்தில் அக்கறை காட்டுவதில்லை. ஆனால் சிங்கள மக்கள் சுதேச வைத்தியத்தில் அதிகநம்பிக்கை வைத்துள்ளார்கள்"என்று கூறினர்.

சாவகச்சேரி நகரமுதல்வர் சி. க மயில்வாகனம் தமது உரையில்,'4 ரூபாவாகவிருந்த மேல்நாட்டு மருந்து இன்று 40 ரூபாவரை உயர்ந்துவிட்டது எனவே நோயாளிகள் சுதேசவைத்தியத்தில் அக்கறை எடுக்கிற காலம் நெருங்கியிருக்கிறது. சுதேசவைத்தியர்களின் மருந்துச்செலவைத் தன்னும் கொடுக்காமையால் பல சிறந்த சுதேச வைத்தியர்கள் தமது தொழிலை விடக்கூடிய நிலையிலுள்ளார்கள்" என்று கவலை தெரிவித்தார்,

டாக்டர் ரி.காசிநாதன் பேசுகையில், "நோயாளர்களும் எங்களைப்போலச் சந்தோசமாகப் பொழுதைக் கழிக்க வேண்டும். எனவே அவர்களுக்கு வாசிகசாலை, வானொலி தொலைக்காட்சிப்பெட்டி என்பன வசதிசெய்துகொடுக்க வேண்டும்" என்றார்.

சாவகச்சேரி அறவழிப் போராட்டக்குழுக் தலைவர் எஸ். துரைராசா, இளைப்பாறிய அதிபர் எஸ். ஆர். குருசாமி ஆகியோரும் பேசினர்.

குடிநீர்ப் பிரச்சினை போன்ற சில அத்தியாவசியதேவைகளை நிறைவேற்ற நிதிசேகரிப்பதற்காக 6 பேர்கொண்ட ஓர் உபகுழு தெரிவுசெய்யப்பட்டது

நிர்வாக உறுப்பினர்களுக்கு வைத்தியசாலை நோயாளர்களைச் சுற்றிக்காண்பித்து அவரவர் குறைநிறைகளை அறிய வாய்ப்புக்கிட்டியது.

தேநீர்விருந்தும் இடம்பெற்றது. சங்கச் செயலாளர் திரு. எஸ். செல்வத்துரை நன்றி கூறினர்.

## பாரதியாருக்கு

(5-ம்பக்கத் தொடர்ச்சி]

மாக, நூற்றுண்டு நினைவாகத் தமிழகம் ரூபா நோட்டுக்களையும், நாணயங்களையும் வெளியிடமுன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது''என்று மாங்குளம் மகாவித்தியாலயஅபிவிருத்திச் சபையின் ஆதரவில் நடைபெற்ற பாரதி விழாவில் உரையாற்றிய திரு. வி. த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) குறிப்பிட்டார். விழாவுக்கு பண்டிதர் செ. கதிரேசபிள்ளை தலைமை வகித்தார்.

திரு. திரு நா வு க் க ர சு தொடர்ந்து பேசியதாவது;-

''பாரதியாருடைய வரலாற்றைப் படிக்கும் மக்கள் தமிழினத்தின் பண்பாட்டில் நன்றியுணர்வுக்கு எத்தகைய முக்கியத்துவம் உண்டு என்று ஐயப்படும் நிலைக்குப் பாரதியாரின் வாழ்வு அமைந்துவிட்டது. ஆனல் அவரது பார்வை சர்வதேச முக்கியத்துவம்பெற்று, அவரது பாடல்கள் வையம் முழுவதும் வாழ்த்திப்போற்றும் வகைக்கு உயர்ந்து நிற்கின்றன. உலகின் பல நாடுகளில் பாரதி நூற்றுண்டு விழா அரசமட்டத்தில் கொண்டாடப்படுகின்றன பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலிக்கும் திறன் பாரதியாருக்குக் கைகூடிவிட்டது. ஆனல் அன்றும் இன்றும் பாரதியின் கவிதைகளைப் பாடித் தமது சொந்தப் பிழைப்பை நடாத்தும் சுரண்டல' பேர்வழிகளை எண்ணும்போதுதான் எமக்கு ஆத்திரம் வருகின்றது. சகல வகையான அடிமைத்தனங்களையும் பாரதி எதிர்த்துப் பாடினன். விடுதலை முரசு கொட்டினன். தமிழ் முழக்கம் செய்தான். என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் என்று ஓங்கி ஒலித்தான். உலகில் விடுதலை நாடும் நாடுகளையும், சோஷலிச புதுவாழ்வு தேடும் மக்களையும் மகாகவி வாழ்த்திப் பாடியது நாம் மறந்துவிடக் கூடாது.

விழாவில் திரு. எம். கே. அந்தனிசில், சைவப்புலவர் செல்லத்துரை, முல்லைமணி வே. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 23-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(9—11—82)

மேடம்: பெரியோரைப் பேணுவதன் மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள். பொதுத்துறையில் அதிக புகழ் கிடைக்கும், இன்று மகிழ்ச்சிகரமான தினமாகும்.

இடபம்: புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். பொதுத்துறையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், இல்லத்திலும் இனிமைக்கு இடம் உண்டு மகிழ்ச்சிகரமானதினம்

மிதுனம்: ஒளிபரப்பும் வாழ்க்கை உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும். எதிர்பார்த்ததைவிட விரும்பியவை அதிகம்கிடைக்கலாம். பொன்னான தினம். போற்றத்தக்க முன்னேற்றத்தைகுறிக்கும்.

கடகம்: பணத்தை அள்ளி வீசினாலும் பலன் மட்டாகதிதான் இருக்கும் சக தொழிலாளருடன் மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளவும் புனைந்துரைகளால் மனம் புண்படலாம். பொறுமையே வேண்டும்.

சிங்கம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும் எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சினேகிதர் வழியால் கவலைகள் தோன்றக் கூடும். விவசாயிகளின் ஏமாற்றத்திற்கு இடமுண்டு மனத்திடம் வேண்டும்.

கன்னி: ஒளிமயமான தினம். கல்வித் துறையில் முன்னேற்றமுண்டு. சிரியர்கள்பாராட்டப்படுவார்கள். இன்று ஏற்படும் புதிய திருப்புமுனை நிம்மதியை அளிக்கும். வாசன நலனுமுண்டு.

துலாம்: பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும். தொழில் துறையிலும்பின் தங்கநேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும்இடமுண்டு மனத்திடம் விரும்பத்தக்கது

விருச்சிகம்: எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி காணப்படுகின்றது மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு.

தனு: புரட்சிகரமான மாறுதல்களை எதிர் நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும். உங்கள் முன்னேற்றத்துக்கு அரசியல் வாதி ஒருவர்ஆதரவு கொடுப்பார். இதயத்தில் இன்பம் பொங்கும்

மகரம்: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலைவாரி விடக்கூடும் சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம், அவதானம் வேண்டும்.

கும்பம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறலாம் நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாகும். காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புகள் இறுகும்.

மீனம்: அரச பயத்திற்கு இடமுண்டு. வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம். மின்னியல் பொறியியல் துறையில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்தவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# சாவகச்சேரி பொலிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காவல்செய்யப்பட்டது.காவல் கடமை 2மணிக்கொருதடவை உத்தியோகத்தர்மாற்றுச்செய்வது வழக்கம். நான் காவல் கடமையிலீடுபட்டவர்களை பரிசோதனை செய்து குறிப்பிட்ட பட்ட தங்கள் இடங்களில் கடமை செய்கிறுர்களா என பார்த்து பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்வேன். மற்றநேரங்களில் பொலிஸ் நிலையத்தில் வேறுகடமைகளைப் பார்ப்பேன். அன்றையதினம் கடமை யாற்றும்பொழுது காலைமணிக்கு 6640 கந்தையா, 13227 தர்மசீலன் ஆகிய இருவரும் பொலிஸ் நிலயத்தை காவல் காக்க நியமிக்கப்பட்டிருந்தனர். காலை. 4-6 மணி கடமையிலீடுபடுத்தப்பட்டார்.

27-10-82ம் திகதி காலை 5 மணிக்கு எனது ஒய்வை பதிவு செய்தேன்.

எனக்கு அன்று காலை வேறு வேலை இருந்ததால் அதைக் கவனித்ததால் 5 மணி வரை இருந்தேன். கந்தையா. தர்மசீலன், ஆகியோரை பரிசோதனைசெய்தேன். அவர்கள் இருவரும் பொலிஸ் நிலயத்தின் முன்பக்கத்தில் கடமையிலிருந்தனர்.

அதிகாலை 5மணிக்கு ஒய்வை பதிந்த பின்பு 5-10க்கு எனக்குக்கிடைத்த 3 நாள் ஒய்வு நாளையும் பதிவுப்புத்தகத்தில் பதிந்து விட்டு, நான் தங்கியிருக்கும் அறைக்குச் சென்றேன். அந்த அறை பொலிஸ் நிலைய வளவின் இடது பக்கம் உள்ளது விடுதியின் பின்பக்கமாகவுள்ள 3அறைகளின் நடு அறையில் தங்கியிருக்கிறேன்.

நான் தங்கியிருக்கும் முற் பக்கமும் 3 அறை உண்டு. அவை யாழ். பிரதானவீதியைப் பார்த்தபடி உண்டு.

### வேட்டு சத்தம் கேட்டது

நான் அறைக்குச்சென்றபின் எனது சீருடையை அகற்றி விட்டு மலசல கூடத்துக்குச் சென்றபின் எனது அறைக்குத் திரும்பி வந்தேன், எனது ஊருக்குப்போவதற்காகஎனது சாதாரண உடையை அணிய முயன்றேன். அப்பொழுது காலை 5-20 மணி இருக்கும், பொலிஸ் நிலைய பக்கமாக அப்பொழுது துவக்கு வேட்டுச்சத்தம் கேட்டது. தொடர்ந்தும் இரு வெடிச்சத்தம் கேட்டது. பின்பு கைக்குண்டு வெடிக்கும் பெரும் சத்தம் கேட்டது ஒய்வெடுத்துக் கொண்டிருந்த நான் பொ. பொ7786 செல்வநாயகம் என்பவரை நித்திரையிலிருந்து எழுப்பினேன் தொடர்ந்து துவக்குவெடிச்சத்தம்பொலிஸ் நிலயத்தில் கேட்டது. எங்களிடம் ஆயுதம் இல்லாதபடியால், அறையிலிருந்து வெளியேறவில்லை.

4-5 நிமிடம் வெடிச்சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டது

வெடிச்சத்தம் நிறுத்தப்பட்ட சொற்பநேரத்தின் பின் பொலிஸ் நிலயத்தின்பின்னல் உள்ள ஒழுங்கைப் பக்கமாகச் சென்ற பிரதான வீதியை எட்டிப் பார்த்தேன். அப்பொழுது ஒரு மினி பஸ்.பொலிஸ் நிலைய பிரதானகேட்டில் சாவகச்சேரி நோக்கித்திரும்பிக்கொண்டிருந்தது. மினிபஸ் இலக்கத்தை என்னால் பார்க்கமுடியவில்லை. அப்பொழுது பொலிஸ் நிலையத்திலிருந்து நேரம் சென்றுவிட்டதாகவும் தூக்கடா என்றும் சத்தம் கேட்டது. பின்புநான் எனது அறைக்குச் சென்றேன். பின்னர் 3 நிமிடங்களுக்குப் பின் மினி பஸ் சாவகச்சேரி நகரை நோக்கிச் செல்லும் சத்தம் கேட்டது. அதன் பின் நானும்செல்வநாயகமும்அறையிலிருந்து வெளியேறிபொலிஸ் நிலையம் சென்றேம்.

அங்குசென்றபோதுபொலிஸ் சார்ஜன்ட் கந்தையா, கான்ஸ்டபிள் ஜெயதிலகாவையும் கண்டேன். அவர்களை பொலிஸ் நிலயப் பின்பக்கம்கண்டேன். காயங்களிருக்கக்கண்டேன். கந்தையாவுக்கு முகத்திலும், ஜெயதிலகாவுக்கு கையிலும் காயங்களிருந்தன.

### தாக்கவந்தவர்கள் சுட்டதால்

அவர்கள் தங்களுக்குபொலிஸ் நிலயத்தைத் தாக்கவந்தவர்கள் சுட்டதால் ஏற்பட்ட காயங்கள் என்றனர்.

அப்பொழுது கருணைநந்தம் பொலிஸ்நிலைய முன்விறுந்தையில் உள்ள வாங்கில் இறந்த நிலையில் படுத்திருந்தார். அவரிலும் துவக்குச் சூட்டுக் காயங்கள் இருந்தன. அவர் படுத்து இருந்த இடத்தில் இரத்தம் இருந்தது. அடுத்து கந்தையா என்பவர் பொறுப்பதிகாரியின் எதிரேயுள்ள காரியாலய விறுந்தை எதிரிலுள்ள காரியாலயத்தின் வாசலில் துப்பாக்கியுடன் குந்தியபடி இறந்துகிடந்தார். அவருக்கும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. இரத்தவெள்ளம் அங்கு இருந்தது. பினனர் பொலிஸ் நிலயத்தை றிசேவ் அறையில் உள்ள பாதுகாப்பு பெட்டிகள் உடைக்கப்பட்டு கைத்துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கிகள், தோட்டாக்கள்,ரவைகள் பணம் வேறு பொருட்கள் இல்லாமல் இருக்கக்காணப்பட்டன

### துவக்கு ரைபிள்கள்

துப்பாக்கி வைக்கும் ராக்கையும் உடைத்து சேதப்படுத்தப்பட்டு, அங்குள்ளதுப்பாக்கிகளும் துவக்குகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் இரும்புக் கதவும் பலவந்தமாக உடைக்கப்பட்டது. அதற்குள் இருந்து துவக்கு ராக்கைசேதப்படுத்தப்பட்டுஅங்கிருந்ததுவக்குகளும் றைபிள்களும் இல்லாமலிருந்தன. நிலங்களிலும் சுவரிலும் குண்டு பட்ட அடையாளங்கள் காணப்பட்டன. நிலயத்திலுள்ள தொலைபேசியும், தகவல் கொடுக்கும்இயந்திரமும் உடைக்கப்பட்டிருந்தன. எதிரிகள் பூட்டப்படும அறையும பலவந்தமாகத் திறக்கப்பட்டு, உடைக்கப்பட்டிருந்தது. றிசேவுக்குமுன்பாகவுள்ள அறையில அதாவது பொறுப்பதிகாரியின் பக்கத்து அறையில் கதவருகாமையில் பொலிஸ் பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் பொன்னையா ராஜகுமார் அல்லது செல்வம் இறந்து கிடந்தார். சூட்டபாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. அவர் இறந்த இடத்திலும் இரத்தவெள்ளம் காணப்பட்டது.

### படிகளில் இரத்தக் கறை

பின்னர் பொலிஸ் நிலைய மேல்மாடிசென்றேன். போகும்போது படிகளில் இரத்தக் கறை இருப்பதைக் கண்டேன்.

பொலிஸ் ஜீப் சாரதி 15611 திலகரத்ன என்பவர் மேல் மாடி முகப்பில் அவர் படுத்திருந்த கட்டில் ஓரமாக நிலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இறந்துகிடந்தார். இவர் இறந்து கிடந்த இடத்தில் இரத்தக்கறை காணப்படவில்லை.

மேலே தொலைக்காட்சிப் பெட்டி சேதமாக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த சுவர்களிலும துவக்குச் சூட்டுச்சன்னம்பட்ட அடையாளங்கள் இரத்தக் கறைகள் காணப்பட்டன சப் இன்ஸ்பெக்டர் உபபரிசோதகர்விக்கிரமசிங்க தங்கும் அறை சென்று பார்த்தேன். அவரது அறையுள் இரத்தம் வெள்ளமாக இருந்தது. அன்றையதினம் அவர் இல்லை. லீவில் சென்றிருந்தார். அந்த இரத்த வெள்ளம் இருந்த இடத்தில் சடலம் எதுவும இல்லை. வீரக்கோன் என்பவர் அங்கு நிற்கவில்லை. நான் மேல் மாடியில நின்றபோது இடதுபக்கத்தில் ஒருகட்டிலின் கீழ் ஒரு கைக் குண்டு இருந்ததை அவதானித்தேன. அதே யாதிரி பொலிஸ் நிலைய முன்பும் வெடிக்காத பெரியகுண்டு இருக்கக் கண்டேன்.

சிறிது நேரத்தின் பின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தென்னக்கோன் வந்து காயப்பட்டவர்களையும்இறந்தவர்களையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு, இசசம்பந்தமாக விசாரணை மேற்கொண்டார்.

பொலிஸ் நிலயத்தைத் தாக்கியவர்களை எவரையும் காணவில்லை என்றும் சொன்னார்

இம்மாதம் 15-ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. [மா]

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை பரமநாதர்

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையைச் சேர்ந்த காசிப்பிள்ளை பரமநாதர் காலமானுர். இவர் காலஞ் சென்ற நாகமுத்துவின் அன்புச்கணவரும், வைத்திய கலாநிதி நடராசா (சாம்பியா) புவனேஸ்வரி, நகுலேஸ்வரி, மகேஸ்வரி (லண்டன்) பத்மாவதி (ஆசிரியை, யூனியன் கல்லூரி) ஆகியோரின் அருமைத்தந்தையாரும், சரஸ்வதி (சம்பியா), பாலசுப்பிரமணியம் (நியூ விக்ரஸ்; இளைப்பாறிய வர்த்தக வங்கி ஊழியர்), சின்னையா (இளைப்பாறிய கூட்டுறவு இலாக உத்தியோகத்தர்), கலாநிதி சிவலோகநாதன் (லண்டன்) சந்திரசேகரி (இளைப்பாறிய மகாஜனக்கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் மாமனுரும், காலஞ்சென்ற தங்கப்பிள்ளை வல்லிபுரம், சின்னுச்சிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற போஸ்ட்மாஸ்டர் சங்கரப்பிள்ளை, கந்தவனம் (இளைப்பாறிய கைத்தொழில் உதவி அதிபர்) ஆகியோரின் மைத்துனருமாவர் அன்னுரின் பூதவுடல் "பாலவாசா" இல்லத்திலிருந்து 09-11-1982 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு, மயிலிட்டி தெற்கு மயானத்திற்குத் தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

5091

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் இரத்தினம்

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்தவரும் இராசம்மாவின் அன்புக்கணவருமாகிய ஆறுமுகம் இரத்தினம் சிவபதமடைந்துவிட்டார். இவர் ஜெகநாதன் (London). ஜெயராணியின் அன்புத்தந்தையாரும், R. நந்தகுமார் உரிமையாளர் நியூ லலிதா ஜுவலர்ஸ், கஞத்தறை, சுகுமா (London), ஆகியோரின் அன்பு மாமனும் ராஜிக்கா, ஷோபிக்கா ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் 10-11-82 புதன்கிழமை காலை 10 மணிககு அன்னுரின் இலலமாகிய 3/1, முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும்-பின்பு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்

5095 மருமகன் R. நந்தகுமார்.

# கணவர் மரணத்தில் மனைவி சந்தேகம்

பூநகரி]

தனது கணவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக மரணவிசாரணை அதிகாரியிடம் மனைவி சந்தேகம் கிளப்பினுர் இதனைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டது.

பூநகரி,மட்டுவில்நாடு, பூமத்தம்கேணி என்ற இடத்தில் வேலன் சுப்பிரமணியம் (48 வயது என்பவரின் மரண விசாரணையின்போதே இச்சம்பவம் நடைபெற்றது.

இறந்தவரின் மனைவி இராசம்மா (42 வயது) சாட்சியமளிக்கையில், இறந்தவருக்கு நான்கு ஆண் பிள்ளைகளும், ஒரு பெண்பிள்ளையுமுண்டு என்றும் கூறினுர்.

எட்டுமாத காலத்துக்கு முன்னர் நாலாயிரம் ரூபாவுடன் பூநகரிக்குச்சென்றவர், திரும்பி வரவில்லை.

தமதுகணவரின் மரணத்தில் அவரின் அண்ணனின் மீது சந்தேகம் இருப்பதாக ஒரு பிரச்னையை மனைவி கிளப்பினுர்.

பிரேதபரிசோதனையின் பின்னர் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. அ. த இராசேந்திரம் ஜே பி. இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## சபாஷ் சுகந்தன்!

(கரவெட்டி)

வீதியில் கண்டெடுத்த தங்கச் சங்கிலியை உரியவரிடம் சேர்ப்பித்த மாணவர் ஒருவர் பாராட்டப்பெற்றுள்ளார்.

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியைச்சேர்ந்த 7ம் வகுப்பு மாணவன் கு. சுகந்தன் என்பவரே பாராட்டைப்பெற்று இருக்கிறுர்.

பிரஸ்தாப மாணவன் பாடசாலைக்குச் செல்லும் வழியில் ஒன்றரைத் தங்கப் பவுண் எடையுள்ள தங்கச் சங்கிலியைக் கண்டெடுத்து கல்லூரி அதிபர் திரு கே. சிவபாதசுந்தரத்திடம ஒப்படைத்தார். அதிபர்முயற்சி செய்து உரியவரைத் தேடிக் கண்டுபிடித்து அவரிடம் சங்கிலியை சேர்ப்பித்தார்.

இந்த நற்செயலுக்காக உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், உயர் வகுப்பு மாணவர்கள் அந்த மாணவனைப் பாராட்டியதுடன் அவருக்கு சன்மானம் வழங்கவும தீர்மானித்துள்ளனர்.

## சாயிபாபா பிறந்ததினவிழா

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இம்மாதம் 23ம் திகதி பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் பிறந்த தினவிழா கொண்டாடப்படவுள்ளது.

சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவிலே சேவாச்சிரமத்தின் 14வது ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு மலரொன்றையும் வெளியிட்டு வைப்பார்.

## மோட்டார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

9.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து சிறீஸ்கந்தராசா[32வயது)வுடன் மோட்டார் சைக்கிளின் பின்பக்கத்தில் இருந்து வீடு நோக்கிச் சென்றபொழுதுஅராலிபாலத்துடன் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீஸ்கந்தராசா பலத்தகாயங்களுடன் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர்சிவனபண்ணை வீதியில் வசிப்பவர்.

### மற்றுமொரு விபத்து

கோப்பாயில் நடைபெற்ற சைக்கிள-கார் விபத்தில்பொ. பசுபதி (78-வயது) என்பவர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் சைக்கிளில் சென்ற போதே விபத்துக்குள்ளானுராம். (மா)

## காலி வன்செயல்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இடம்பெற்றபோது காலி மாவட்ட பொலிஸ் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவரே இருந்தார் இச்சம்பவம நடைபெறறபோது அங்கு பொலிஸ் அதிபர் எவரும் பதவியிலிருக்கவிலலை.

"உதவிப்பொலிஸ் அதிபரே காலியில் சகல பொலிஸ்நிர்வாக நடவடிக்கைகளையும் கவனித்துவந்தார். காலித் தொகுதியில மட்டும் 17,000 முஸ்லீம மக்கள்வசிக்கிறுர்கள். இந்த அசம்பாவித சம்பவங்கள் குறித்து அதிகாலை ஒன்றரை மணிபோல் உதவிப் பொலிஸ் அதிபர் எனக்கு அறிவித்தார். நான் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டேன் என்றுர்.

(இ-வெ)

## கைகலப்பில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் இதனை அறிந்த யாழ். பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து நிலைமையைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் தெரிகிறது. பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர் (மா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.